விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 044 வள்ளுவர் ஆண்டு 2054 தை 18 புதன்கிழமை (01.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

ராஜபக்ஷக்கள் சூறையாடியதை ஈடுகட்ட

## சாதாரண மக்கள் மீது அரசு வரி விதிக்கின்றது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(பொத்துவில்)
ராஜபக்ஷக்கள் சூறையாடியதை ஈடுகட்ட சாதாரண மக்கள் மீது அரசு வரி விதிக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார். 15

ஈஸ்டர் தாக்குதலுக்கு

## மன்னிப்புக் கோரினார் மைத்திரிபால சிறிசேன



(கொழும்பு)
தமது ஆட்சிக் காலத்தில் தமக்கு தெரியாமல் வேறொரு தரப்பினரால் நடத்தப்பட்ட ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் அதேபோன்று கத்தோலிக்க 15

## வடமராட்சி கடலில் காணாமல்போன சிறுவன்

சடலமாக மீட்பு



(கரணவாய்)
வடமராட்சி கிழக்கு மாமுனைக் கடலில் குளிக்கச் சென்ற நிலையில் சுழியில் அகப்பட்டு கடலில் மூழ்கிய சிறுவனின் 15

தமிழ் மக்களுக்கான தீர்வை

# உடனடியாக வழங்க வேண்டும்

### டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு



(அம்பாறை)
தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை உடனடியாக வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் இடம் பெற்ற. கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 15

## ஊழல் தரப்படுத்தலில் இலங்கை 101 வது இடம்

(கொழும்பு)
2021ஆம் ஆண்டை விட 2022ஆம் ஆண்டு, இலங்கையில் அதிக ஊழல் நிறைந்த ஆண்டாக பதிவாகியுள்ளது.

2022ஆம் ஆண்டு ஊழல் புலனாய்வு சுட்டெண் (CPI) தரவுகளை மேற்கோள்காட்டி ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷன் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

2021ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டு, இலங்கையின் தரவரிசை ஒரு 15

அனைத்து நாடுகளின் ஒத்துழைப்புடன்

## சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு துரிதமாக கிடைக்கும்

### அமெரிக்க தூதுவர் ஜூலி சங்



(கொழும்பு)
அனைத்து நாடுகளின் ஒத்துழைப்புடன் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு துரிதமாகக் கிடைக்கும் என அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவை சந்தித்தபோதே அமெரிக்க தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளதாக 15

முகமூடி அணிந்து கத்தி முனையில்

## 20 பவுண் நகைகள், ரூ.5 இலட்சம் பணம் கொள்ளை

### பருத்தித்துறை திக்கத்தில் சம்பவம்

(கரணவாய்)
முகமூடி அணிந்து வந்த கொள்ளையர்கள் கத்தி முனையில் 20 பவுண் நகைகள் மற்றும் 5 இலட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையடித்து கொண்டு சென்றுள்ளனர்.

பருத்தித்துறை திக்கம் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று. 15

இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள

## இலங்கையிலுள்ள மத வழிபாட்டு ஸ்தலங்களை மேம்படுத்த இந்தியா உதவி

(கொழும்பு)
இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள மத வழிபாட்டுத் ஸ்தலங்களை மேம்படுத்துவதற்கு இந்தியா உதவிகளை வழங்கவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன விற்கும் இந்திய முயற்சியாண்மை 15

## சர்வதேச சட்டங்களை மீறி இலங்கை செயற்படுகின்றது

### எப்.ஐ.டி.எச் குற்றச்சாட்டு

(கொழும்பு)
இலங்கை அரசாங்கம் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களை மீறிச் செயற்படுவதாக மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சம்மேளனம் (International Federation for Human Rights) குற்றம் சுமத்தியுள்ளது.

போராட்டத்தை ஒடுக்குவதன்மூலம் நாட்டில் தந்திரோபாய ரீதியாக அடக்குமுறை கையாளப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## கல்வியங்காட்டில் வாள்வெட்டு மூவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் உள்ள கடையொன்றினுள் வாள்களுடன் புகுந்து அடாவடியில் ஈடுபட்டு விட்டு 5 லட்சம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் பொருட்களை கொள்ளையிட்டுத் தப்பித்த 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிதம்**

தரம் 6 முதல் G.C.E (O/L) வரையான தனி/குழு வகுப்புக்கள் நடைபெறுகின்றன

மேலதிக விபரங்கட்கு

(14465)

**076 676 9675**

ஆடியபாதம் வீதி, நல்லூர்.



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

076 097 3127




**யாழ்.அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ**

## வீரகத்தி பிள்ளையார் கோயில்

**பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும்**

மேற்படி ஆலயத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் எதிர்வரும் (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறும். இதில் பிள்ளையார் அடியார் கள், திருவிழா உபயகாரர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-5878)

**– ஆலயப்பணியில் நிர்வாகம்**

# கண்ணீர் அஞ்சலி

## பொன்னையா கோவிந்தசாமி (சாமி)



அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்து
பண்புடைமை காத்து
பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய்
ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
ஏனோ இறைவன் இடை நடுவில்
பறித்து விட்டான்.

– சந்திரலிங்கம் குடும்பம்

(C-5877)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



கடந்த 04.01.2023 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

## கதிரன் கந்தையா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 01.02.2023 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனிததீர்த்தக்கரையில் கரைக்கப்படும். இந்நிகழ்விலும். 03.02.2023 அன்று நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும் சபிண்டீகரணம். மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

கரம்பைக்குறிச்சி மேற்கு, வரணி. இங்ஙனம் – குடும்பத்தினர் (14451)

# மரண அறிவித்தல்

## திருமதி மார்க்கண்டு இலட்சுமிப்பிள்ளை

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 . 10 . 1927 | 31 . 01 . 2023 |



புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு இலட்சுமிப்பிள்ளை (31.01.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை - நாகம்மா தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வல்லியப்பர் - தெய்வானை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மார்க்கண்டுவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும், தர்மபாக்கியம் (கனடா), சகுந்தலா, புஸ்பராணி (டென்மார்க்), ராசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திராதேவி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பாலச்சந்திரன் (கனடா), மகாலிங்கம் (டென்மார்க்), அமுதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் நடராசா, தங்கம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான சண்முகராசா, தியாகராசா, மற்றும் கணேசலிங்கம் (அவுஸ்திரேலியா), அமிர்தலிங்கம், (அவுஸ்திரேலியா), பஞ்சலிங்கம் (அவுஸ்திரேலியா) ஆகி யோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், விஜயலட்சுமி, பாலசுப்பிரமணியம் மற்றும் பிரியாணி (அவுஸ்திரேலியா), றஞ்சிதமலர் (அவுஸ்திரேலியா), பானுமதி (அவுஸ்திரேலியா), ஆகியோரின் மைத்துனியும், செந்தூரன் (லண்டன்), சிந்துஜன் (லண்டன்), வசிதரன், கயல்விழி (கனடா), சுமதி, தயாபரன் (கனடா), சுபா (கனடா), மதுராந்தகி, பாலசங்கர் (கனடா), டினேசன் (டென்மார்க்), சோபன் (டென்மார்க்), தனுஜன் (டென்மார்க்), பிரியங்கா (லண்டன்), நிலுஜா (லண்டன்), டிலக்ஷன் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2023) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாறையடி புலோலி, தெற்குப் புலோலி.

தொடர்புகளுக்கு : 074 244 3982


தகவல் : குடும்பத்தினர்

(C-5880)

# மரண அறிவித்தல்

## பொன்னையா கோவிந்தசாமி (சாமி)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 . 09 . 1960 | 27 . 01 . 2023 |



சரசாலையைப் பிறப்பிடமாகவும் குடத்தனை மேற்கு குடத்தனையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா கோவிந்தசாமி (சாமி) அவர்கள் கடந்த 27.01.2023 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், உதயகலாவின் (கலா) அன்புக் கணவரும் வல்லிபுரம், விஜாலாட்சி, காலஞ்சென்றவரான நவரத்தினம், விமலாதேவி, விக்கினேஸ்வரி, தங்கரத்தினம், பரமேஸ்வரி, நாகேஸ்வரி, மகேந்திரராசா (லண்டன்), சந்திரஉதயம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பூபாலசிங்கம், சந்திரலிங்கம், சரோயாதேவி, செல்வேந்திரன், சசிகலா, பாபு ஆகியோரின் அன்பு மைத்துனரும், சோபனா, கோகுலராஜ் (மலேசியா), கீர்த்தனா, கபில்ராஜ் (கட்டார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிதர்ஷன், சிவர்ஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிருத்திவ்ராஜ், யஸ்வந், ஜஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2023) புதன்கிழமை குடத்தனை மேற்கு, குடத்தனையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடத்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: மகன், மகள்
076 942 6317, 076 870 7365, 076 992 7371,
+6011 3999 9116 (மலேசியா)

(C-5877)

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை சர்வதேச நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மீண்டும் கோரிக்கை

(ஒட்டாவா)

**இலங்கை அதிகாரிகள் மீது கனடாவின் பொருளாதாரத் தடைகளை பாராட்டியுள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள், இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

மேலும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நியூரம்பெர்க் போன்ற புதிய நீதிமன்றத்தின் மூலம் வழக்குத் தொடரவும் அழைப்பு விடுப்பதாக உலகத் தமிழ் அமைப்புகளின் சம்மேளனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் வேலாயுதபிள்ளை அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற 26 ஆண்டுகால உள்நாட்டுப் போரின் போது மனித உரிமைகள் மீறப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு உயர்மட்ட அதிகாரிகள் மீது கனடா இந்த மாதத் தொடக்கத்தில் தடைகளை அறிவித்திருந்தது.

சர்வதேச நீதிமன்றத்தின் முன் இலங்கையை கனடா நிறுத்த வேண்டும் என சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலியிடம் தமது தரப்பு இந்தக் கோரிக்கையை விடுத்ததாக அவர் தெரிவித்தார்.

இலங்கையின் மூத்த அதிகாரிகளுக்கு அமெரிக்கா முன்னர் அனுமதி அளித்துள்ளது.

ஆனால் ராஜபக்ஷ சகோதரர்களை தடைப் பட்டியலிட்ட ஒரே நாடு கனடா என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் மைத்திரி

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

தனது ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல், துயரச் சம்பவம் என்றும் அதற்காக மன்னிப்பு கோருவதாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் செய்யும் குற்றங்களுக்கு ஜனாதிபதி பொறுப்பு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவர் என அக்கட்சி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



கடன் அடிப்படையில்

## பொருட்கள், சேவைகள் பெறுவதை தவிர்க்கவும்

*அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை*

(கொழும்பு)

கடன் அடிப்படையில் அரச நிறுவனங்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதை தவிர்க்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

மேலும் அனைத்து அரச அதிகாரிகளுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் எனவும் அதனை மீறும் அரச அதிகாரிகள் அதற்கான செலவினங்களை தனிப்பட்ட முறையில் செலுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## ஊழியர்களின் எண்ணிக்கை குறைப்பு-பந்துல குணவர்தன

(வோஷிங்டன்)

அரச நிறுவனங்களிலும் ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்களில் அனைத்து அரச நிறுவனங்களிலும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவு; 13 பற்றிய நிலைப்பாட்டில் குழப்பம்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அதிகாரப் பகிர்விற்கு ஆதரவை வெளிப்படுத்தினாலும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது குறித்து எவ்வித நிலைப்பாட்டையும் இதுவரை எடுக்கவில்லை.

இனப்பிரச்சினை தொடர்பான சமீபத்தில் இடம்பெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நிராகரித்த ஐக்கிய மக்கள் சக்தி, அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசாங்கத்தின் முன்மொழிவுகளை முன்வைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, பாராளுமன்ற பெரும்பான்மையை வைத்து ஜனாதிபதியை தன் பக்கம் வைத்திருக்கும் அரசாங்கம் தனது முன்மொழிவுகளை வெளியிட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இருப்பினும் தமது ஆட்சியில் அதிகாரப் பகிர்வு எந்த வடிவத்தில் இருக்கும் என்பதை ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரே அறிவிப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் மாகாணங்களுக்கு சுயாட்சியை வழங்குவதை இலக்காகக் கொண்ட அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த விரும்புவதாக ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## உலகப் பொருளாதாரம் இந்த ஆண்டு வீழ்ச்சி

### சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

இந்த ஆண்டு உலகப் பொருளாதார வளர்ச்சி விகிதம் 2.9% ஆகக் குறைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

உலகப் பொருளாதார பகுப்பாய்வு தரவுகளின்படி இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டதாகவும் இந்த ஆண்டு உலகப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தாலும் அடுத்த ஆண்டு அது 3.1% ஆக உயரும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. (நி)

## தேர்தல் பணிக்கு தேவையான எரிபொருள் கிடைக்காததால் சிக்கல்

(கொழும்பு)

தேர்தல் பணிகளுக்கு தேவையான எரிபொருள் கிடைக்காததால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது மிகவும் பிரச்சினைக்குரிய சூழ்நிலையாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் பணிகளுக்காக மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு போதியளவு எரிபொருள் இல்லாததால், பல மாவட்டங்களில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு கடும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் தேர்தலுக்கு தேவையான எரிபொருளை பெறுவது தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

எனினும், தேர்தல் ஆணையம் கோரியபடி எரிபொருளை வெளியிட முடியாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தலை நடத்துவதற்கு தடைகளை நீக்குமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (நி)

## வடக்கின் புகையிரத பாதை அபிவிருத்தி 5 மாதங்களில் நிறைவடையும்

### அமைச்சர் பந்துல



(கொழும்பு)

அநுராதபுரத்தில் இருந்து வவுனியா வரையான தொடரூந்து பாதையின் அபிவிருத்தி பணிகள் எதிர்வரும் 5 மாதங்களில் பூர்த்தி செய்யப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திப் பணிகளை பார்வையிடுவதற்காக கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த பின்னர் இவ்வாறு அறிவித்திருந்தார்.


அநுராதபுரத் திலிருந்து வவுனியா வரையான வடக்கு புகையிரதப் பகுதியின் அபிவிருத்திப் பணிகள் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் அதன் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுவதாகவும் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டம் இது என்றும் பந்துல சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தத் திட்டம் இந்தியாவின் இர்கான் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், இதற்காக இந்திய கடன் திட்டத்தின் கீழ் 91.27 மில்லியன் டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதி சூப்பர் கிண்ணம் அல் நாசர் வெளியேறியது



சவுதி அரேபியாவின், சவுதி சுப்பர் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கிறிஸ்டியானோ றொனால்டோ தலைமையிலான அல் நாசர் கழக அணி, அரை இறுதியில் தோல்வியுற்று வெளியேறியுள்ளது.

றியாத் நகரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அரை இறுதிப்போட்டியில் றொனால்டோவின் அல் நாசர் கழகத்தை அல் இத்திஹாட் கழகம் 3:1 கோல்கள் விகிதத்தில் வென்றது.

இப்போட்டியில் றொனால்டோ கோல் எதுவும் புகுத்தவில்லை. பல தடவைகள் அவர் கோல் புகுத்தும் நிலையை அண்மித்த போதிலும் அவரின் முயற்சிகளை அல் இத்தியாட் பின்கள வீரர்கள் முறியடித்தனர்.

அல் இத்திஹாட் சார்பில் ரோமாரின்ஹோ, அப்தேர் ரஸாக் ஹம்தெல்லா, மொஹன்னாத் அல் ஷன்கீதி ஆகியோர் கோல்களைப் புகுத்தினர்.

அல் நாசர் சார்பில், அண்டர்சன் டெலிஸ்கா மாத்திரம் கோல் புகுத்தினார்.

போர்த்துக்கல் வீரரான றொனால்டோ, அல் நாசரில் இணைந்த பின்னர், பிரான்ஸின் பிஎஸ்ஜி கழகத்துடனான கண்காட்சி போட்டியில் பங்குபற்றினார். அப்போட்டியில் றொனால்டோ 2 கோல்களை புகுத்திய போதிலும், மெஸி, எம்பாப்பே, நெய்மார் முதலானோரின் கோல்களால் பிஎஸ்ஜி கழகம் 5:4 கோல்களால் வென்றது.

கடந்த 22 ஆம் திகதி, சவுதிப்ரோ லீக் தொடரில் அல் எத்திபாக் கழகத்துடனான போட்டி மூலம் அல் நாசரின் சார்பில் தனது முதல் உத்தியோகபூர்வ போட்டியில் றொனால்டோ அறிமுகமானார். அப்போட்டியில் 1:0 விகிதத்தில் அல் நாசர் கழகம் வென்றது. ஆனால், அப்போட்டியிலும் அல் நாசர் சார்பில் டெலிஸ்காவே கோல் புகுத்தினார். அதில் றொனால்டோ கோல் புகுத்தவில்லை.

இந்நிலையில், றொனால்டோ பங்குபற்றிய 2 ஆவது உத்தியோகபூர்வ போட்டியிலும் றொனால்டோ கோல் புகுத்த முடியாமல் போயுள்ளதுடன், சவுதி சுப்பர் கப் தொடரிலிருந்தும் அல் நாசர் வெளியேறியுள்ளது. (4)

# அவுஸ்திரேலிய ஓபன்; ஜோகோவிச் சம்பியன்



ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ் திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரின், ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று செர்பியாவின் நோவக் ஜோகோவிச், சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற சம்பியன் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில், செர்பியாவின் நோவக் ஜோகோவிச், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாசை எதிர்கொண்டார்.

பெரும் எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 6-3, 7-6, 7-6 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தன் வசப்படுத்தினார்.

இது நோவக் ஜோகோவிச் பத்தாவது அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் சம்பியன் பட்டமாகும்.

அத்துடன் அவர் தனது 22 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று ஸ்பெயினின் ரபேல் நடாலை சமன் செய்துள்ளார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2756

**வாணி**




**சிந்துஜன்**




**தனிகன்**




**எழில்**




**வருணிகா**




**விகிர்தினி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செலவினங்களை மேலும் குறைக்குமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

அரசாங்கத்தின் வருமானம் ஜனவரி மாதத்திற்கான மாதாந்த செலவினத்தை விட தற்போது மிகவும் குறைவாக இருப்பதால் அரச செலவினங்களை மேலும் குறைக்க வேண்டும் என்று நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், நலன்புரி, மருந்துகள் மற்றும் கடன் கொடுப்பனவுகள் தவிர்ந்த, ஏனைய அனைத்துச் செலவுகளையும் தற்போது திறைசேரிக்கு ஏற்பது கடினம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எனவே, ஏற்கனவே நடைமுறையில் உள்ள வரித் திருத்தங்களின் மூலம் வருமானம் ஈட்டத் திட்டமிடப்பட்டிருக்கும் வருமானங்கள் கிடைக்கும் வரை, அரசாங்க செலவினங்களை மேலும் குறைக்க வேண்டும் அல்லது ஒத்திவைக்க வேண்டும்.

திறைசேரியால் முன்னுரிமை அளவுகோல்கள் அமைக்கப்படும் எனவும் அதுவரை சிறு செலவினங்களுக்காக ஒதுக்கப்படும் பணத்தை விடுவிப்பது மட்டுப்படுத்தப்படும்.

அரச நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவது தவிர்க்கப்பட வேண்டும் எனவும், அதனை மீறும் எந்தவொரு அதிகாரியும் தனிப்பட்ட முறையில் செலவுகளுக்கு பொறுப்பேற்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். (நி)

## தொடர்ந்து நான்காவது மாதமாக பணவீக்கம் குறைந்துள்ளது

(கொழும்பு)

இலங்கை பணவீக்க விகிதம் கடந்த ஆண்டு டிசெம்பரில் 57.2% ஆக இருந்ததை ஒப்பிடுகையில் 2023 ஜனவரியில் 54.2% ஆக குறைந்துள்ளதாக புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உணவுப் பொருட்களின் விலையில் ஒரு வருடத்திற்கு முந்தைய வருடத்தை விட 60.1% உயர்வை பிரதிபலித்துள்ளது.

2023 ஜனவரி மாதத்திற்கான அனைத்து பொருட்களுக்கான நுகர்வோர் விலைச் சுட்டெண் 24.3 ஆக இருந்தது மற்றும் குறியீட்டு புள்ளிகளில் 1.1 அதிகரிப்பைப் பதிவு செய்தது. மின்சார விலையில் அதிகரிப்பு இல்லை என்றால், அடுத்த மாதம் பணவீக்கம் 51.9% ஆகவும் மார்ச் மாதத்திற்குள் 50% இற்கும் குறைவாகவும் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## வசந்த முதலிகே விடுதலை

(கொழும்பு)

2022 ஒகஸ்ட் 18 ஆம் திகதியன்று கைது செய்யப்பட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 150 நாட்களுக்கு பின்னர் நேற்று அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

29 வயதான முதலிகே, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பமிடப்பட்ட உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 13 ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டாம்

# பௌத்த தேரர்கள் கடிதம்

(கொழும்பு)

**13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டாம் எனக் கோரி எல்லே குணவன்ச தேரர் மற்றும் பெங்கமுவே நாலக தேரர் ஆகியோர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.**

பொலிஸ் காணி அதிகாரங்கள் உள்ளிட்ட சில அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுமாயின் அது நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தம் இந்தியாவால் திணிக்கப்பட்டது என்றும் இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார மூலோபாயத் திட்டத்தின் ஒரு பகுதியாக அது இலங்கையின் பாராளுமன்றத்தில் வலுக்கட்டாயமாக நிறைவேற்றப்பட்டது என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 13 ஆவது திருத்தத்தை சர்வஜன வாக்கெடுப்பின்றி முழுமையாக அமுல்படுத்த வேண்டாம் எனவும் உள்நாட்டு வளங்கள் மற்றும் சொத்துக்கள் வெளிநாட்டினருக்கு விற்பனை செய்வதை உடனடியாக தடுக்கவும் கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் ஊழல் மற்றும் வரி ஏய்ப்பு மூலம் நாட்டுக்கு இழந்த செல்வம் மற்றும் வளங்களை மீட்டெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைப் போக்குவதற்கு ஏற்றுமதியை அதிகரிப்பது மற்றும் அரச செலவீனங்களைக் குறைப்பது அவசியமானது.

இந்நிலையில் ஜனாதிபதி உட்பட அமைச்சரவையில் உள்ள எவரும் உள்ளூர் உற்பத்தியாளர்களை வலுப்படுத்துவதற்கான எந்தவொரு மூலோபாயத் திட்டங்களையும் முன்வைக்கவில்லை என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# மரணங்களில் 83 வீதமானவை தொற்றா நோய்களாய் பதிவாகின்றது

## விசேட மருத்துவ நிபுணர் சமிந்தி சமரகோன்

(கொழும்பு)

இலங்கையில் 50 சதவீதமான நீரிழிவு நோயாளர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என சுகாதார அமைச்சின் தொற்றாநோய் பிரிவின் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் சமிந்தி சமரகோன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிகழும் மரணங்களில் 83 வீதமானவை தொற்றாநோய்களால் பதிவாகுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தாத காரணத்தினால் நோயாளர்களுக்கு சிறுநீரக நோய் அல்லது மாரடைப்பு ஏற்படுவதாகவும் சில நோயாளர்கள் உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்படுவதாகவும் மருத்துவர் சமிந்தி சமரக்கோன் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

01.02.2023
தை 18, புதன்கிழமை
ஏகாதசி பிற்பகல் 5.00 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 5.48 மணிவரை

சுபநேரம் 5.06-6.36 மணிவரை
இராகுகாலம் 12.36-2.06 மணிவரை
பீம ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம் - அனுசம்

வளவன்


மேஷம்

உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.


கடகம்

எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு.


துலாம்

பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


மகரம்

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


சிம்மம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


விருச்சிகம்

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், உடல் நலனில் கவனம் தேவை, கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.


கும்பம்

குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் கிடைக்கலாம்.


மிதுனம்

ஆழ்ந்த சிந்தனையுண்டு, உறவினர்களின் சந்திப்புகளால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கன்னி

செய்தொழில் மேன்மையுண்டு, தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும், கௌரவமான நாள்.


தனுசு

சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


மீனம்

நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள் போசன சுகமுண்டு.

**எண்ணங்களை செயலாக்கும் ஆற்றலே வெற்றியாக வளர்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழர்களின் உரிமைகள் கிடைத்தால்

# சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியும்

### பாராளுமன்ற உறுப்பினர் விக்கினேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

**தமிழர்களுக்கான உரிமைகள் கிடைத்தால் மட்டுமே சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியும் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அதேவேளை பெப்ரவரி நான்காம் திகதியை கரிநாளாக பிரகடனப்படுத்தியும் தமிழர்களுக்கான தீர்வுகளை வலியுறுத்தியும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி இடம்பெறவுள்ள பேரணியையும் அவர் வரவேற்றார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றதைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதில் வழங்கியிருந்தார்.

தன்னைப் பொறுத்தவரை 1958 இல் சுதந்திர தின அணி வகுப்பு அணியில் இணைந்ததாக குறிப்பிட்டார். அதன் பின் இதுவரை சுதந்திர தினங்களில் கலந்து கொள்வதில்லை. ஏனெனில் தமிழர்களுக்கு சுதந்திரம் இதுவரை கிடைக்கவில்லை. இனியும் எமக்கான உரிமைகள் கிடைத்தால் மட்டுமே கலந்து கொள்ள முடியும் எனத்தெரிவித்தார். (4-6-33)



ஊடகவியலாளர் எஸ்.என். நிபோஜனுக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. (படம்:-சதீஸ்)

## அறுவடை முடியும் வரை கால்நடைகளை வயல்களில் கட்ட வேண்டாம்

### விவசாயிகள் கோரிக்கை

(கரணவாய்)

வடமராட்சியில் நெல் அறுவடைகள் ஆரம்பித்துள்ளன.

இந் நிலையில் வயல்களுக்கு அருகில் கால்நடைகளை கட்டுவதால் நெற்பயிர்களை நாசம் செய்வதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே அறுவடை முடியும் வரை கால்நடைகளை வயல்களுக்கு அருகில் கட்டுவதை தவிர்க்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-60)

## குடியிருப்புக்குள் ஊடுருவி காட்டு யானைகள் அட்டகாசம்

### பயன்தரு பயிர்கள் நாசம்

(குருமன்காடு)

வவுனியா மாமடு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கள்ளிக்குளம் - சிதம்பரம் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புகளுக்குள் ஊடுருவிய காட்டு யானைகள் வயலகள், தென்னைகள் மற்றும் வாழை மரங்களை நாசம் செய் துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது,

அண்மைக் காலமாக இப்பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதுடன் இங்கு நுழையும் காட்டு யானைகள் கள்ளிக்குளம் - சிதம்பரம் கிராமங்களுக்குள் உட்புகுந்து தொடர்ந்தும் மக்களை அச்சுறுத்தி வருகின்றன.

இப் பிரதேசத்தில் கடந்த ஒரு வாரகாலமாக என்றுமில்லாத வகையில் தனியன் காட்டு யானை ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டு வருகின்றது. மேலும் இவ்வாறு இரவு நேரத்தில் திடீரென கிராமத்திற்குள் நுழைகின்ற காட்டு யானைகளினால் பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

எனவே காட்டு யானைகளை விரட்டுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-6-250)

## புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகள்-2022

**பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை**

அ.திபிஷன் - 159, கி.தரண்ராஜ் - 155, கு.தனுசிகா - 150, பி.யக்சிதா - 147, அ.ஆந்தனுசியா - 146, ச.கிருதிகா - 145.

**அச்சுவேலி ஆரம்ப பாடசாலை**

ஜெ.சாஜித்-162, பி.கு.மகிழ்நங்கை-161, நி.நிதாருகா-158, சு.அஸ்வினி-154, ச.அக்ஷிகா-150, அ.யதுசாந்-150, கு.ஆத்மிகா-144, ம.ஜென்சிகா-143.

**நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்**

ஜே.டமியன்-155, பி.அக்ஷாலினா-145.

**கிளி/மாசார் அ.த.க.பாடசாலை**

து.தக்சனா-176, வி.திஸ்ரிகா-172, ர.டெனிசியா-168, த.லோகிதன்-145, ந.அஞ்சனா-145, சு.ஆரண்யா-143.

**கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்**

யா.அபிசாய்-165.

## குருநகர் புதுமை மாதா ஆலய திருவிழா

(குருநகர்)

குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழா கடந்த 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நற்கருணை வழிபாடுகள் இன்று புதன்கிழமை மாலை 4.30 இற்கு இடம் பெறும்.

திருவிழா திருப்பலியை நாளை காலை 5 மணி . 6.30 மணி மற்றும் 11 மணிக்கும் நடைபெறும். (4-6-106)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில்-தலையாழி சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று புதன் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பதினேழு நாட்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன. (4)

## தனியார் பேருந்து மீது கல் வீசித் தாக்குதல்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலடிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தனியார் பேருந்து ஒன்றின் மீது கல் வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் பயணிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு துவிச்சக்கரவண்டிப் போட்டி

(கரணவாய்)

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வடமுனையின் சக்கோட்டையிலிருந்து கம்பஹா வரையான துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.15 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டியாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சக்கோட்டையில் இருந்து ஆரம்பமான இந்நிகழ்வில் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிறி, முப்படைகளின் உயர் அதிகாரிகள், விளையாட்டுத் துறையினர் என பலரும் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.



துவிச்சக்கரவண்டி ஓட்டம் பருத்தித்துறை நகர் வழியாக மந்திகை கொடிகாமம் ஏ- 9 வீதியூடாகச்சென்று கம்பஹாவை அடையும். (4-6-60-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஐ முழுமையாக நிறைவேற்றினால்

# நாடு பிளவுபடும் எனக் கூறுவது வெட்கக்கேடானது

## சரத் வீரசேகர மற்றும் விமலுக்கு ஜனாதிபதி பதிலடி

**(கொழும்பு)**

**13 ஆவது திருத்தம் முழுமை பெற்றால் நாடு பிளவுபடும் என பதறியடிப்பது வெட்கக்கேடானது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார்.

இதற்கமைய நிறை வேற்று அதி கார ஜனாதிபதி முறைமையைப் பயன்படு த்தி 13 ஆவது திருத்தச் சட் டத்தை முழுமையாக நிறை வேற்று வேன் என்று கடந்த வாரம் நடை பெற்ற சர்வகட் சிக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரி வித்திருந்த கருத்துக்கு எதி ராக தெற்கில் உள்ள கடும் போக்குவாத அரசியல்வாதிகளான விமல் வீரவன்ச, சரத் வீரசேகர உள்ளிட்டவர்கள் கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ள னர்.

"அரசமைப்பின் 13 ஆவது திரு த்தச் சட்டத்தால் நாட்டுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அதை முழுமை யாக நடைமுறைப்படுத்து வதால் நாடு ஒருபோதும் பிளவு படாது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நிறைவேற் றப்படக் கூடாது என்று போர்க்கொடி தூக்குவோர் முதலில் திருத்தச் சட்ட த்திலுள்ள பரிந்துரைகளை வாசித்துப் பார்க்க வேண்டும்.

அதை விடுத்து இந்த திருத்தச் சட் டம் முழுமை பெற்றால் நாடு பிளவு படும் என்று பதறியடிப்பது வெட்கக் கேடானது.

மொட்டுக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் அல்லது இருவர் 13 ஆவது திருத்தச் சட்டத்து க்கு எதிராகக் கருத்துக்களை வெளியிடுவதால் ஒட்டுமொத்த மொட்டுக் கட்சியுமே 13 இற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றது என எவரும் தப்புக் கணக்குப் போடக் கூடாது.

13 ஐ விமர்சிப்போர் தாராளமாக விமர்சிக்கட்டும். ஒவ்வொரு விமர் சனங்களுக் கும் என்னிடம் பதில்கள் உள் ளன" என ஜனாதிபதி தெரி வித்தார். (நி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சாதனை கண்டது யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்



செல்வன்.யூபேட் ஜோண்சன் டமியன் (155 புள்ளிகள்)



செல்வி.பிரசன்னாத் அலைக்ஷா அக்ஷலினா (145 புள்ளிகள்)

கடந்த 2022 ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவச் செல்வங்களை பாராட்டுவதோடு 85 புள்ளிக்கு மேல் பெற்ற செல்வி.மோகன் கேஷாலினியையும் பாராட்டி நிற்கின்றோம். இவர்கள் மேலும் பல சாதனைகள் படைக்க வேண்டும் என வாழ்த்துவதோடு இவர்களை கற்பித்த ஆசிரியை திருமதி.பாலசுகி சதானந்தன், எமது பாடசாலையின் முதல்வர் செல்வி.தவறஞ்சினி பொன்னம்பலம் மற்றும் ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம். (14462)



## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



**திருமதி. சுலோசனா கெங்காதரன்**

SLTS-I (Sp.Tr.Primary, B Ed)

### சேவை விபரம்

| | |
|---|---|
| யா/வட்டு மத்திய கல்லூரி | [ஆசிரியர், பகுதித்தலைவர்] 1990.03.26 - 2014.01.05 |
| யா/அராலி சரஸ்வதி வித்தியாலயம் | [ஆசிரியர்] 2014.01.06 - 2014.10.09 |
| யா/வட்டு சுப்பிரமணியம் வித்தியாலயம் | [கடமை நிறைவேற்று அதிபர்] 2014.10.10 - 2017.02.20 |
| யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் | [உதவி அதிபர்] 2017.02.21 - 2023.01.31 |

தனது முப்பத்து மூன்று வருட ஆசிரிய சேவையை நிறைவு செய்து இன்று ஓய்வு பெறும் திருமதி. சுலோசனா கெங்காதரன் அவர்களின் ஓய்வுக் காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

[C-5873]

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.



## புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சேவை நிலையங்கள் ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு விடுதல்

**கீழே குறிப்பிடப்பட்ட சங்கத்தின் சேவை நிலையங்கள் ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட உள்ளன.**

1. **புலோலி தெற்கு கிளை கட்டிடம்**
   ஆகக் குறைந்த மாத வாடகை :- 20,000/-
   பிணை காசு :- 200,000/-
   02 வருட காலம்
   (சங்கத்திற்குரிய விற்பனை சார்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாது)

2. **சங்க அலுவலகத்துடன் இணைந்த சில்லறை விற்பனை நிலையம்**
   ஆகக் குறைந்த மாத வாடகை :- 7,000/-
   பிணை காசு :- 100,000/-
   01 வருட காலம்

3. **சேவிஸ் நிலையம்**
   ஆகக் குறைந்த மாத வாடகை :- 20,000/-
   பிணை காசு :- 200,000/-
   01 வருட காலம்

4. **பேக்கரி**
   ஆகக் குறைந்த மாத வாடகை :- 17,000/-
   பிணை காசு :- 100,000/-
   01 வருட காலம்

விண்ணப்பிக்க விரும்புவோர் 14.02.2023 ஆம் திகதிக்கு முன்னர் கேள்விக்கூறுகளை சங்கத்தின் தலைவர்/செயலாளருக்கு எழுத்து மூலம் மூடிய உறையுடன் நேரிலோ, தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு:-** கூடுதலான பெறுமதியான கேள்விக்கூறுகள் வழங்குபவர்களுக்கே மேற்படி சேவை நிலையங்கள் நிபந்தனையுடன் வாடகை ஒப்பந்தம் மூலம் வழங்கப்படும்.

**தலைவர்,**
**புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.** (C-5871)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் பள்ளிவாசலில் குண்டு வெடிப்பு

# 83 பேர் உயிரிழப்பு-150 பேர் படுகாயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பெஷாவர் நகரின் பள்ளிவாசலொன்றில் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்பில் 83 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெஷாவர் பொலிஸ் தலைமையகத்திலுள்ள பள்ளிவாசலுக்குள் தொழுகையின் போது பாரிய குண்டு வெடித்தது.

இத்தாக்குதலில் 59 பேர் உயிரிழந்தனர் எனவும் 150 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 83 ஆக அதிகரித்துள்ளது என மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் தலிபான் என அறியப்படும் தெஹ்ரீக் ஈ தலிபான் பாகிஸ்தான் இயக்கம் இத்தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஒகஸ்ட் மாதம் தமது தளபதி உமர் காலித் குராசனி கொல்லப்பட்டமைக்கு பதிலடியாக இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த இயக்கம் கூறியுள்ளது. (நி)



## ஒலிம்பிக் நிகழ்வு

# ரஷ்யா பங்கேற்றால் உக்ரைன் புறக்கணிக்கும்

## ஜெலன்ஸ்கி மிரட்டல்

(கீவ்)

2024 ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெறும் ஒலிம்பிக்கில் ரஷ்யாவை போட்டியிட அனுமதிப்பது பயங்கரவாதத்தை எப்படியாவது ஏற்றுக்கொள்ளக்கூடியது என்பதைக் காட்டுவதாக உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனிடம் இந்த விவகாரம் குறித்து கலந்துரையாடியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஒலிம்பிக் போட்டிகளின் பிரச்சாரத்திற்கு ரஷ்யா அனுமதிக்கப்படக்கூடாது.

சர்வதேச ஒலிம்பிக் ஆணையம், ரஷ்ய மற்றும் பெலாரஷ்ய விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக்கில் நடுநிலையாளர்களாக போட்டியிடலாம் என்று தெரிவித்துள்ளது.

ஆனால், ரஷ்ய மற்றும் பெலாரஷ்ய விளையாட்டு வீரர்கள் போட்டியிட அனுமதித்தால் 2024 பாரிஸ் போட்டியை புறக்கணிப்பதாக உக்ரைன் மிரட்டல் விடுத்துள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலென்ஸ்கி தனது இரவு நேர உரையில், 'ரஷ்ய விளையாட்டு வீரர்களை மீண்டும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு கொண்டு வர சர்வதேச ஒலிம்பிக் ஆணையம் மேற்கொண்ட முயற்சிகள் பயங்கரவாதம் எப்படியாவது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பதை உலகம் முழுவதும் சொல்லும் முயற்சியாகும்.

ரஷ்யா தனது ஆக்கிரமிப்பு அல்லது அதன் அரச பேரினவாதத்திற்கான பிரச்சாரமாக எந்த விளையாட்டு நிகழ்வையும் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது' என அவர் தெரிவித்தார். (நி)

## பெண் உதவிப் பணியாளர்களுக்கு

# தலிபான்கள் தடை விதிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதல் தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது.

அப்போதில் இருந்து அந்நாட்டில் பெண்களுக்கு எதிராக கடும் கட்டுப்பாடுகளை தலிபான்கள் விதித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டில் இருந்து தலிபான் ஆட்சியில் பெண்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன.

பெண்கள் பள்ளி, கல்லூரி செல்லக்கூடாது, பணிக்கு செல்லக்கூடாது, வாகனங்கள் ஓட்டக்கூடாது, தலை முதல் கால் வரை முழுவதுமாக மறைக்கும் வரையில் புர்கா அணிய வேண்டும் என்பது உட்பட பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தனர்.

தற்போது அங்கு 6 ஆம் வகுப்புக்கு மேல் பெண்கள் படிக்க முடியாத நிலை உள்ளது. அனைத்து அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் பெண்கள் கல்வி பயில தடை விதிக்கப்பட்டது.

இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதைத்தொடர்ந்து சில நாட்களுக்கு முன்பு ஐக்கிய நாடுகள் சபையில் மனிதாபிமான பிரிவு தலைவர் மார்ட்டின் கிரிபித்ஸ், ஐ.நா துணை பொதுச்செயலாளர் அமீனா முகமது ஆகியோர் தலைமையிலான குழுவினர் ஆப்கானிஸ்தான் சென்று பெண்களுக்கு எதிரான செயல்கள் பற்றி விசாரணை நடத்தினர்.

அப்போது மனிதாபிமான நடவடிக்கைகளில் பெண்களின் செயற்பாட்டை வழங்குவதற்கான வழிகாட்டுதல்கள் அதிகாரிகளால் உருவாக்கப்பட்டு வருவதாக தலிபான்கள் தரப்பில் ஐ.நா குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அந்நாட்டில் மீண்டும் பெண்கள், சிறுமிகள் படிக்க வாய்ப்பு உருவாகும் என்று கருதப்பட்டது. ஆனால் தலிபான்கள் பெண் உதவி பணியாளர்களுக்கும் தடை விதித்துள்ளனர்.

இது பல முக்கியமான மனிதாபிமான திட்டங்களுக்கு மரண அடி என்று ஐக்கிய நாடுகள் சபையில் மனிதாபிமான பிரிவு தலைவர் மார்ட்டின் கிரிபித்ஸ் தெரிவித்தார்.

தலிபான்கள் இந்த கட்டளைக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். இல்லையென்றால் இதுபேரழிவை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார். (நி)

## நியூசிலாந்தின் வடக்கு பகுதியில் வெள்ளப்பெருக்கு

# அவசரகால நிலை பிரகடனம்

(வெலிங்டன்)

நாட்டின் சில பகுதிகள் மோசமான வானிலைக்கு தயாராகி வருவதால், நியூசிலாந்தின் வடக்குப் பகுதியில் முன்னெச்சரிக்கையாக அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

ஒக்லாந்து நகரம் கடந்த வெள்ளிக்கிழமை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதுவரை இந்த வெள்ளத்தால், நான்கு பேர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரக் கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன.

மோசமான வானிலை மற்றும் முக்கியமான உட்கட்டமைப்பை சரிசெய்வதற்கு வீதிகளை தெளிவாக வைத்திருக்க வேண்டிய தன் அவசியத்தை முன்னிட்டு ஆக்லாந்து பாடசாலைகளில் பெப்ரவரி 7 ஆம் திகதி வரை வருகை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அனைத்து சர்வதேச மற்றும் உள்நாட்டு விமானங்கள் தரையிறக்கப்பட்ட பின்னர் நூற்றுக் கணக்கான மக்கள் சிக்கித் தவிக்கும் ஒக்லாந்து விமான நிலையத்தில் வெள்ளத்தை தடுக்க



மணல் மூட்டைகள் மற்றும் குழாய்கள் தயாராக உள்ளன.

வடக்குத் தீவின் ஏனைய பகுதிகளிலும் தெற்குத் தீவின் கீழ் பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்படக் கூடும் எனவும் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சர்வதேச சிறுதானிய வருடம் - 2023
## இனை முன்னிட்டு சித்தமருத்துவமும் சிறுதானியங்களும்
## தொடர் வாரக் கட்டுரைகள்



சென்ற வாரத் தொடர்ச்சி...

Batanical Name-Bambusa arundinaceae
Family-Bambusaceae

மூங்கில் அரிசியானது சித்த மருத்துவத்தில் மிகவும் ஆரோக்கியமான சிறந்த ஊட்டச்சத்துக்கள் நிறைந்த சிறுதானிய உணவும் மருந்தும் ஆகும்.

மூங்கில் மரமானது 40-60 வருடங்கள் வரை வளர்ந்து அதன் ஆயுட்காலம் முடியும் தருணத்தில் பூத்துக் குலுங்கும். இப்பூக்களில் இருந்து காய்கள், கனிகள் உருவாகி விதைகளாக மூங்கில் நெல் நிலத்தில் சொரியும். இந்நெல்லில் இருந்தே மூங்கில் அரிசி பெறப்படுகின்றது. இவை மூங்கில் நிறைந்த காடுகளில் அதிகமாக நிகழும். எமது பழங்குடி மக்களின் ஆரோக்கியத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் மூங்கில் அரிசி பாவனைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

மூங்கில் அரிசியானது உடலில் உள்ள விசக் கிருமிகளை அகற்றக் கூடியது. வாத, கப தோசங்களால் ஏற்படும் நோய்களை தீர்க்க வல்லது. குருதி அழல் நோய், இடைவிடாத காய்ச்சல், கண் நோய் இவைகளை நீக்கும். உடலை திடகாத்திரமாக பேணக் கூடியது. உடலுக்கு பலத்தைக் கொடுக்கும்.

இதன் அரிசியை ஏழை மக்கள் வேறு உணவின்றி பசியால் வருந்துங்கால் சமைத்துச் சாப்பிடுவது வழக்கம். ஆகவே இதை பஞ்சம் காக்கும் அரிசி எனக் கூறுவதுமுண்டு.

மூங்கில் அரிசியை வெண் பொங்கலாகவும் சர்க்கரை கூட்டிப் பாயாசமாகவும் செய்துண்ண அவை உடலுக்கு ஊட்டம் கொடுத்து நோய்களை அணுக வொட்டாமல் செய்யும்.

அரிசியை உணவு வகைகள் செய்து உண்பது வழக்கமாகும். நீரிழிவு நோயாளர்களுக்கு இது தகுந்த உணவாகும். சீனிச்சத்தையும் குறைக்கும். மூங்கில் அரிசியானது சுவாசக்குழாய் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் சிறந்தது. இதில் அதிகளவு புரதச்சத்து உள்ளது. இடுப்பு வலி, கழுத்து வலி, மூட்டு வலிகளை போக்கக் கூடியது. மாதவிடாய்ச் சிக்கல்களையும் நீக்கக் கூடியது. கிளைசீமிக் இன்டெக்ஸ் குறைவாக உள்ளதால் இரத்தத்தில் சீனியின் அளவையும் கொலஸ்ரோலின் அளவையும் சீராக வைத்திருக்கக்கூடியதாக இருக்கும். கல்சியம், உயிர்ச்சத்து B உள்ளது. பசியைக் கட்டுப்படுத்தும். வாரத்தில் 2 நாட்கள் மூங்கில் அரிசியை பயன்படுத்தலாம். எவ்விதமான வாத வலிகளை நீக்கக் கூடியதான வலி நிவாரணி அரிசி மூங்கில் அரிசியாகும். மூங்கில் மரத்தி லிருந்து அதிகளவு ஒட்சிசன் வெளிப்படுவது முக்கிய அம்சமாகும். மூங்கில் அரிசிமா, தினை மா, சாமை அரிசிமா மூன்றையும் சம அளவு எடுத்து கஞ்சி காய்ச்சி எடுத்தால் நீரிழிவு, அதிகரித்த கொலஸ்ரோல் கட்டுப்படும்.

### மூங்கில் அரிசிக் கூழ்

மூங்கில் அரிசியை நீரில் களைந்து வெயிலில் உலர்த்திய பின்பு பயன்படுத்தவும். 1 கப் மூங்கிலரிசியை மிக்சியில் போட்டு எடுத்து ஒரு பாத்திரத்தில் நீர் விட்டு இந்த மாவை நன்கு கரைத்து, அடுப்பேற்றி எரிக்கவும். தேவையான அளவு உப்பும் சேர்க்கவும். கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். இறக்கி ஒரு இரவு ஆறவிட்டு மறு நாள் காலை சாப்பிடலாம். சாப்பிடும் போது சிறிதளவு புளிக்காத தயிரும் சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் அரிந்ததை சேர்த்து பருகவும். இதில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால் கொழுப்பை சேர விடாது. பசி எடுக்காது.

### மூங்கில் அரிசி பாயாசம்

மூங்கில் அரிசியை மிக்சியில் போட்டு அரவல் நொருவலாக்கி 2,3 தடவைகள் நீரில் நன்கு கழுவி பின்பு 5 மணி நேரம் நீரில் ஊற விடவும். பின்பு ஒரு பாத்திரத்தில் அரிசியை போட்டு ஒரு கப்பிற்கு 5 கப் வீதம் நீர் விட்டு அடுப்பேற்றி வெந்ததும் தேவையான அளவு முந்திரி வற்றல், முந்திரிப் பருப்பு, 3 ஏலக்காய், ஒரு கப் பசுப்பால், நெய் தேவையான அளவு.

சர்க்கரையை நீரில் கரைத்து பாகாக்கி அதையும் சேர்த்து பாயாசம் காய்ச்சுவது போல் காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். சர்க்கரைக்கும் பதில் பனை வெல்லம் சேர்த்தால் இன்னும் உடற் பலத்தைக் கொடுக்கும். ஆரோக்கியமான, போசாக்கு நிறைந்த உணவாகும்.

### மூங்கில் அரிசிப் பானம்

மூங்கில் அரிசி-100 கிராம், கசகசா-100 கிராம், பாதாம் பருப்பு-20 கிராம், தேன்- தேவையான அளவு, கஜூ-20 கிராம், காய்ச்சிய பசுவின் பால்.

ஒரு வாணலியில் மூங்கிலரிசியை கருக விடாமல் பொரித்து எடுக்கவும். பின்பு கசகசாவையும் கருகவிடாமல் பொரித்து எடுக்கவும். ஆற விட்டு பின்பு தனித்தனியாக பொடித்து எடுத்துக் கொள்ளவும். பின்பு பாதாம் பருப்பையும் கஜூவையும் வறுத்து எடுக்கவும். பின்பு பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும். சட்டியை அடுப்பேற்றி பாலைச் சூடாக்கி 2 மேசை க்கரண்டி மூங்கில் அரிசிப் பொடி, ஒரு மேசைக் கரண்டி கசகசாப்பொடி சேர்த்து கட்டி படாமல் பாலில் வேக விட்டு, பாதாம் பொடி, முந்திரிப் பருப்பு பொடி, சிறிதளவு நீரும் சேர்த்து கலக்கி பின் கருப்பட்டி அல்லது தேன் கலந்து பருகவும். நீரிழிவு நோயாளர்கள் சர்க்கரையை தவிர்த்துக் கொள்ளவும். நரம்புத் தளர்ச்சியை நீக்கும். உடலுக்கு பலத்தைக் கொடுக்கும். ஊட்டச்சத்தை வழங்கக் கூடியது. நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கச் செய்யும். எனவே மூங்கில் அரிசியைக் கொண்டு கஞ்சி, பொங்கல், பாயாசம், பானம் மட்டுமல்ல மூங்கிலரிசி மாவிலிருந்து இட்லி, தோசை போன்றன தயாரித்தும் பயன்படுத்தலாம். மூங்கில் அரிசியானது யாழ்ப்பாண தமிழ் மருந்துக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

(தொடரும்)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# இயற்கை நோயெதிர்ப்புக்கு சிறுதானியமும் இலைக்கறி வகைகளும்

(கடந்த வார தொடர்ச்சி)

தினமும் ஏதோவொரு இலைக்கறி வகையை எமது உணவுக்குள் நாம் சேர்த்துக் கொள்ள வாய்ப்புக்கள் உண்டு. எமது வீட்டுத் தோட்டத்தில் உயிர்வேலிகளில் இவற்றை வளர்த்து உணவாக்கவும் முடியும். வல்லாரை, பொன்னாங்காணி, புதினா, அகத்தி, முருங்கை, முசுட்டை, சிறுகீரை, பசளி, வெங்காயத்தாள், கோவா இலை, முட்டைக்கோவா இலை, முள்ளங்கி இலை இன்னும் பலவகைகள் எம் ஊரிலேயே இருக்கின்றன.

கிராமங்களில் இவ்வாறான இலைக்கறி வகைகள் அதிகம் இயற்கையாகவே வளரும். அவற்றைப் பறித்து தமது உணவில் மக்கள் சேர்த்துக் கொள்வர். ஆனால் நகர்ப்புறங்களில் இவை சந்தைகளில் விற்பனைக்கு வந்தாலன்றி மக்களுக்கு கிடைத்தல் அரிது. தமது வீட்டுத்தோட்டங்களில் வளர்த்து உடன் கிடைத்த இலைக்கறியாக உணவாக்குவதும் சிறந்தது.

சிறுதானியங்களிலும் எமது உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் அதிகம் காணப்படுகின்றன. அவற்றை நாம் எமது உணவில் சேர்த்துக் கொள்ளும் போது தேவையான பல்வகை ஊட்டச்சத்துக்களும் செறிவடைந்து எமது உடல் ஆரோக்கியமானதாக வைத்திருக்க உதவும். ஆக மொத்தத்தில் எமது அன்றாட உணவில் எமக்கு விருப்பமான ஏதோவொரு இலைக்கறி வகைகளையும் சிறுதானியங்களையும் சேர்த்துக் கொள்வதை வழக்கப்படுத்திக் கொள்ளல் வேண்டும். சிறுவர்கள், தாய்மார்கள், தாய்மையடையும் பெண்கள் அவசியமாக இலைக்கறி வகைகளை இன்னும்



சிறுதானியங்களையும் உணவாக உட்கொள்ளல் வேண்டும். அதற்கு எமது விவசாயப் பெருமக்கள் சிறுதானியங்களை பயிரிடுவதையும் அதிகரித்துக் கொள்ளல் வேண்டும். பொருளாதார சிக்கலுக்குள் சிக்கி எமது விவசாயமும் உற்பத்தியும் அடிபடுவதனை தினமும் செய்திகளில் நாம் காண்கின்றோம். மக்கள் பொருட்களின் அதிகரித்த விலைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் அல்லல்படுவதையும் அன்றாடம் சராசரியான ஊட்டச் சத்தான உணவை உண்பதற்கு வழியில்லாமல் தவிப்பதையும் காண்கின்றோம். எமது இயற்கையான உணவு முறைகளுக்குள் எம்மை நாம் ஈடுபடுத்தி இந்த நிலைமையை சமாளித்துக் கொள்வதனைத் தவிர வேறு வழிகள் இருப்பதாகத் தெரியவில்லை.

குறிப்பாக பெண்களுக்கு அவர்களின் தாய்மைப்பேறு காலத்தில் போலிக் அமிலம் அவசியமாகின்றது. இது இலவசமாக, இலகுவாக இலைக்கறி வகைகளில் அதிகம் காணப்படுகின்றது. இலைக்கறி வகைகளை காய வைத்து பவுடராக்கி அதனை பின் குளிகையாக்கி பயன்படுத்துவதை விட இயற்கையாக, சுத்தமான, சுகாதாரமான இலைக்கறி வகைகளை வளர்த்து அவற்றை நாம் உணவாக கொள்ளல் அவசியம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

சந்தைகளில் விற்பனையாகும் அநேகமான இலைக்கறி வகைகளுக்கு அசேதன பசளைப் பிரயோகம் மேற்கொள்ளப் படுகின்றது. இயற்கையான வழியில் மாடுகட்டி சேதன முறையில் உற்பத்தி செய்யும் விவசாய பெருமக்களும் அதிகமானவர்கள் இருக்கின்றார்கள். அவர்களை இனங்கண்டு இலைக்கறி வகைகளை கொள்வனவு செய்து பயன்படுத்தலாம்.

சிறுதானியங்கள் மற்றும் இலைக்கறி வகைகளில் உடல் எதிர்ப்புச்சக்தியை ஊக்குவிக்கும் அன்ரிஒட்சிடென்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவற்றை அன்றாடம் உணவில் சேர்க்கும் போது அவை உடலில் அவ்வப்போது சுவறி எமக்கான பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. இனங்கண்டு தெரிந்து நஞ்சற்றதாக நாமே வளர்த்து உணவாக்கும் காலத்தை தற்கால பொருளாதார நெருக்கடியும் பரவிவரும் தொற்று நோய்களும் வலிந்து ஏற்படுத்தியிருக்கின்றன. என்றாலும் அவை எமக்கான நன்மைக்கானதாகவே எனக் கருதினால் எம்மையும் எம்மவர்களையும் நாம் இயற்கை வழியில் காப்பாற்றிக் கொள்ளலாம்.

(முற்றும்)



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் வவு.பல்கலையில் அங்குரார்ப்பணம்



(நெளுக்குளம்)

வவுனியா பல்கலைக் கழகத்தில் இளைஞர், யுவதி களுக்கான தலைமைத்துவ த்தை மேம்படுத்தும் நோக் கோடு தலைமைத்துவ அபி விருத்தி நிகழ்ச்சி திட்டம் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் பங்களிப்போடு வவுனியா பல்கலைக்கழகத் தின் வியாபார கற்கைகள் பீடம் ஏற்பாடு செய்துள்ள இத் திட் டத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட வதிவிட பிரதிநிதி மலினி கேர்விங், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாதசுந்தரன், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வவுனியா பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ரி. மங்க ளேஸ்வரன் உட்பட பீடாதி பதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்த னர். (4-6-299)

## மழை காரணமாக

# நெல்லை உலர வைக்க முடியாது திண்டாடும் விவசாயிகள்

(கண்டாவளை)

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இரவு முதல் பெய் யும் பெரு மழையினால் அறு வடை செய்த நெல்லை உரிய விலைக்கு சந்தைப்படுத்த முடியாமலும் உலர வைக்க முடியாத நிலையிலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதுடன் அறுவடை செய்த நெல்லை வீதியில் உலர வைத்துள்ள நிலையில் மழை காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கால போக நெற்செய்கை அறுவ டைகள் தற்போது ஆரம்பிக்கப்ப ட்டுள்ளன.

இவ்வாறு அறுவடை செய் யும் நெல்லை விவசாயிகள் உரிய விலையில் சந்தைப் படுத்த முடியாத நிலையில் போதிய நெல் உலரவிடும் தளங்கள் இல்லாத நிலையில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் நெல்லை உலர வைத்து வருகின்றனர்.

குறிப்பாக வீதிகளில் நெல்லை உலர விட்டிருந்த சமயம் நேற்று முன்தினம் அதிகாலை முதல் பெய்யும் மழை காரணமாக நெல்லை உலர்த்த முடியாது விவசாயி கள் பாதிக்கப்பட்டுள்ளனர் அத்துடன் தொடர் மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் வயல்களிலும் வெள்ள நீர் காணப்படுகின்றது. (4-6-315)

# 'மதுபான நிலையம் வேண்டாம்' தனிநபர் உணவு தவிர்ப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் மேற்கில் உணவகத்துடன் கூடிய மது விற்பனை நிலை யத்தினை திறப்பதற்கு எதிர் ப்புத் தெரிவித்து தனிநபர் ஒருவர் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தினை ஆரம்பித்து ள்ளார்.

நேற்று நண்பகல் 12.00 மணியளவில் இப்போராட்ட த்தினை தொடங்கி உள்ளார். அக்கராயன் மேற்கு இம்மாஸ் நகர்ப் பகுதியில் குறித்த மது விற்பனை நிலையம் திறப்பத ற்கு அப்பகுதி பொது அமைப்பு கள் எழுத்து மூலமாக எதிர்ப் பினைத் தெரிவித்து மனுக் கள் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர் உட்பட பல்வேறு தரப்பினருக்கும் கையளித்த நிலையில் கடந்த 29 ஆம் திகதி ஆரோக்கியபுரம் கிராம த்தில் ஒன்று கூடிய பொது அமைப்புகள் குறித்த மது விற்பனை நிலையம் திறக்கக் கூடாது என்ற தீர்மானத்தினை எடுத்து இருந்த நிலையில் தனி நபர் ஒருவர் இன்று போரா ட்டத்தினை ஆரம்பித்து உள் ளார்.

பாடசாலைகள், ஆலயங் கள், தேவாலயங்கள், பொது மண்டபங்கள், முன்பள்ளி கள், மக்கள் செறிந்து வாழும் பகுதியில் மது விற்பனை நிலையம் வேண்டாம் என உணவு தவிர்ப்பு போரா ட்டத்தில் ஈடுபட்டுள்ளவர் தெரிவித்துள்ளார். (4-6-350)

# கசிப்பு உற்பத்தியால் வன்முறைகள் அதிகரிப்பு

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

முல்லைத்தீவு தென்னியங் குளம் கிராமத்தில் கசிப்பினைக் கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ள னர். 130 குடும்பங்கள் வாழ் கின்ற இக்கிராமத்தில் அதிக ரித்த கசிப்பு காரணமாக குடு ம்ப, சமூக வன்முறைகள் அதிக ரித்துள்ளதாகவும் பொலிஸா ருக்கு பொதுமக்களினால் தக வல்கள் வழங்கப்பட்ட போதி லும் பொலிஸார் கிராமத்திற்கு வந்து நடவடிக்கைகள் எடுப்ப தில்லை எனவும் இதன் கார ணமாக வன்முறைகள் அதிக ரித்து மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பெற் றோர்களினால் தெரிவிக்கப்படு கின்றது.

கிராம உத்தியோகத்தர் மூலம் துணுக்காய் பிரதேச செயலகத்திற்கும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் துணுக்காய் பிரதேச செயலகம் தென்னியங்குளம் கிராமத்தில் கசிப்பினை கட்டுப்படுத்துவத ற்கு விழிப்புணர்வுச் செயற்பாடு களை முன்னெடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. தென்னியங்குளம் கிராமத்தில் உற்பத்தி செய்யப்ப டும் கசிப்பு அயல் கிராமங்களுக் கும் எடுத்து சென்று விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக் க ப்படுகின்றது. (4-6-350)

# அடிப்படை வசதிகள் இன்றி முல்லை.பாலைப்பாணி கிராமம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு பாலைப் பாணி கிராமத்திற்கான பிர தான வீதி கடந்த 35 ஆண்டு களுக்கு மேலாக புனரமைக்கப் படாமை மற்றும் போக்குவரத்து வசதியின்மை தொழில் வாய்ப்பின்மை, என்பவற்றால் அப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 67 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு சிரம ங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளன.



முல்லைத்தீவு மாவட்டத் தின் மிகவும் பின்தங்கிய பிர தேசமாக காணப்படும் பாலை ப்பாணி கிராமத்தில் கடந்த காலங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ் ந்து வந்த நிலையில் கடந்த காலயுத்தம் காரணமாக அதி களவான மக்கள் இடம் பெய ர்ந்து இந்தியாவின் தமிழக த்திற்கு சென்றுள்ளனர்.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து மேற் படி கிராமத்தில் 67 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி 12 ஆண்டுக ளாகிய நிலையிலும் மேற்படி கிராமத்திற்கான பிரதான வீதி யாக காணப்படும் வன்னி விளாங்குளம் மூன்றுமுறிப்பு வீதி இதுவரை புனரமைக்கப் படாத நிலையில் காணப்படு வதுடன், மழைக்காலங்களில் மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இதனைவிட குறித்த கிரா மத்தில் தினமும் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படுவதுடன் வீதிப் போக்குவரத்துக்களின் போதும் யானை அச்சுறுத்தல் மத்தி யிலும் பாலப்பாணி கிராமத்தில் இருந்து வன்னி விளாங்குளம் மற்றும் மாங்குளம் உள்ளிட்ட பாடசாலைகளுக்கு தினமும் ஒன்பது கிலோமீற்றர் தூரம் காட்டு பாதைவழியாக பாடசா லைகளுக்கு செல்லும் மாண வர்கள் யானைகளின் அச் சுறுத்தல்களை எதிர்கொள் வதாகவும் கிராமமக்கள் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை கிராமத்தில் வாழும் அனைத்து குடும்பங் களும் வறுமை நிலையில் வாழ்ந்து வருகின்றன என்றும் தற்போது எந்தவித தொழில் வாய்ப்புக்களும் இன்றியே வாழ் ந்து வருவதாகவும் மேற்படி கிராம மக்கள் தெரிவித்து ள்ளனர். (4-6-315)



முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயத்தின் நுழைவாயில் வளைவு திறப்பினை முன்னிட்டு நேற்று மாணவர்கள் மரதன் ஓட்டத்தில் கலந்து கொண்டனர்.

(படம்-கிருஷ்ணகுமார்)




நீர்வேலி கிராமிய வங்கி திறப்பு விழா கடந்த 23 ஆம் திகதி வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.ச தலைவர் ப.இராசேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 118

# தயக்கம் வெற்றிகளை தடுத்துவிடும்



நிலவில் முதன் முதலில் கால் வைத்தவர் யார்? இந்தக் கேள்விக்கு யாராயிருந்தாலும் உடனே பதில் சொல்லி விடுவீர்கள், நீல் ஆம்ஸ்ட்ராங் என்று. நிலவில் முதன் முதலில் கால் வைத்திருக்க வேண்டியவர் யார் தெரியுமா? பல பேருக்கு தெரியாது அவர் எட்வின் சி ஆல்ட்ரின்.

அவர்தான் நிலவுக்கு சென்ற அப்பல்லோ விண்கலத்தின் விமானி.ஆல்ட்ரின் அமெரிக்காவின் விமானப்படையில் பணிபுரிந்தவர்.

நீல் ஆம்ஸ்ட்ராங்க் அமெரிக்காவின் கப்பல் படையில் வேலை பார்த்தவர். என்பதால் தான் இந்த பயணத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர்கள் சென்ற அப்பல்லோ விண்கலம் நிலவை அடைந்ததும் நாசாவிலிருந்து பைலட் பர்ஸ்ட் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் ஆல்ட்ரினுக்கோமனதில் சின்னத் தயக்கம்.

இடது காலை எடுத்து வைப்பதா? வலது காலை எடுத்து வைப்பதா? என்றல்ல. 'நிலவில் முதன் முதலில் கால் எடுத்து வைக்கிறோம். புவியீர்ப்பு விசையற்ற இடத்தில் இருக்கிறோம். கால் வைக்கும் இடம் எப்படி இருக்கும் என்று தெரியாது. புதை மணலாக இருந்து உள்ளே இழுத்து விட்டால் எரி மணலாக இருந்து காலை சுட்டுவிட்டால் என்ற தயக்கத்தில் சில நொடிகள் தான் தாமதித்திருப்பார்.

அதற்குள் நாசாவில் இருந்து இரண்டாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது. கோ பைலட் நெக்ஸ்ட்.

நீல் ஆம்ஸ்ட்ராங் கட்டளை வந்த அடுத்த நொடி காலடி எடுத்து வைத்தார்.

உலக வரலாறு ஒரு நொடி தயக்கத்தில் மாற்றி எழுதப்பட்டது. திறமையும் தகுதியும் இருந்தும் கூட தயக்கத்தின் காரணமாக தாமதித்ததால் இன்று ஆல்ட்ரினை யாருக்கும் தெரியவில்லை.

முதலாவது வருபவரைத்தான் இந்த உலகம் நினைவில் வைத்திருக்கும் என்பது மட்டுமல்ல, தயக்கம், பயம் இவை எந்த அளவுக்கு நம் வெற்றியை பாதிக்கும் என்பதற்கு இதுவே உதாரணம்.

இனி நிலவை பார்க்கும் போதெல்லாம் இந்தச் சம்பவத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு நிமிடத் தயக்கம் நம்முடைய மிகப் பெரிய வெற்றிகளைத் தடுத்து விடுகிறது. நாம் எல்லோருமே மிகப்பெரும் சாதனைகளை படைக்கிற வல்லமை உடையவர்கள் தான். நம்முடைய தயக்கம், பயம், கூச்சம் இவைதான் நம் முதல் எதிரி.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முன் மாகாண சபைத்தேர்தலை நடத்த வேண்டும்

பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற உண்மை நோக்கம் காணப்படுமாயின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும்.**

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு நாட்டில் இல்லாத பிரச்சினைகளை ஜனாதிபதி தோற்றுவிக்கிறார் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

தேர்தலை பிற்போட அரசாங்கம் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்த நிலையில் தற்போது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. தேர்தல்கள் ஆணைக்குழு. ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.எஸ். எம். சார்ல்ஸ் பதவி விலகியமைக்கான காரணம் இதுவரை



வெளிப்படுத்தப்படவில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்களை நியமிக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

மாகாண சபை தேர்தலை நடத்த முடியாத அளவிற்கு சட்டச்சிக்கல் காணப்படுகிறது. மாகாண சபைத் தேர்தல் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக் கூற வேண்டும். இனப் பிரச்சினைக்கு உண்மையில் தீர்வு காண வேண்டுமாயின் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். 13 ஆவது திருத்தத்திற்கு மகா சங்கத்தினர் உட்பட தெற்கு அரசியல்வாதிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இனங்களுக்கிடையில் தேவையில்லாத பிரச்சினைகளை ஜனாதிபதி தோற்றுவிக்கிறார். மக்களாணை இல்லாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என அவர் தெரிவித்தார். (நி)

# கஞ்சா செய்கைக்கான அமைச்சரவை பத்திரம் விரைவில்

(கொழும்பு)

கஞ்சா இறக்குமதிக்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அமைச்சரவை பத்திரத்தை விரைவில் முன்வைக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுக்கு மூலிகை மருந்துகளை இறக்குமதி செய்யும் போது மூலிகைசார் கஞ்சா இறக்குமதிக்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரம் உள்ளிட்ட பல பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் கஞ்சா செய்கைக்குத் தேவையான காணிகளை வழங்கும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# மார்ச் மாதம் முதல் தேங்காய் விலை குறையும்

## தென்னை ஆராய்ச்சி நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

சந்தையில் அதிகரித்துள்ள தேங்காய் விலை எதிர்வரும் மார்ச் மாதம் முதல் குறையும் என தென்னை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

தேங்காய் உற்பத்தி குறைந்ததன் காரணமாக தற்போது சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை 100 ரூபாவை தாண்டியுள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் மார்ச் மாதத்தில் சந்தைக்கு சுமார் 600 மில்லியன் தேங்காய் கிடைக்கும் எனவும் இதனால் தேங்காய் விலை குறையும் எனவும் தென்னை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. (நி)

# மரண அச்சுறுத்தல் தொடர்பில் ஜனாதிபதியின் தொலைபேசியை பரிசீலனை செய்ய வேண்டும்

(கொழும்பு)

அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலை பேசியை பரிசோதிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைபேசியை பரிசோதிக்க வேண்டும் என அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தொலைபேசி யாருடையது என்பது குறித்தும் ஆராய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## பாகம் - 1

### காவியத் தொடர் 91





தேள், நட்டுவாக்காளி, பாம்பு முதலியவற்றைக் கண்டால் எப்படி இரக்கம் காட்டாமல் கொல்வீர்களோ, அப்படிக் கொன்று விடுங்கள்! துர்க்காதேவிக்கோ, கண்ணகியம்மனுக்கோ பலி கொடுத்து விட்டால் இன்னும் விசேஷம். எப்படியும் அவன் உயிரோடிருக்கும் வரையில் நம்முடைய நோக்கத்துக்கு இடையூறாகவே இருப்பான்!"

"ரவிதாஸரே! நீங்கள் இவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்வதற்கு அவன் பெரிய கைகாரனாயிருக்க வேண்டும் அப்படிப்பட்டவன் யார்?"

"யாரா? அவன் பயங்கர ஆற்றல் படைத்த ஒற்றன்!"

"யாருடைய ஒற்றன்?"

"எனக்கே அது வெகுகாலம் சந்தேகமாகத்தானிருந்தது. சுந்தர சோழரின் ஒற்றனோ, ஆதித்த கரிகாலனின் ஒற்றனோ என்று சந்தேகப்பட்டேன்; இல்லையென்று கண்டேன். பழையாறையில் இருக்கிறாளே, ஒரு கிழப் பாதகி, அந்தப் பெரிய பிராட்டியின் ஒற்றனாயிருக்கலாம் என்று இப்போது சந்தேகிக்கிறேன்."

"ஆகா! அப்படியா? சிவபக்தியில் மூழ்கி, ஆலயத் திருப்பணி செய்து வரும் அந்தச் செம்பியன் தேவிக்கு ஒற்றன் எதற்கு?" "அதெல்லாம் பொய், இந்த முன் குடுமிக்காரனின் வீர வைஷ்ணவம் எப்படி வெளி வேஷமோ அப்படித் தான் அந்த முதிய ராணியின் சிவபக்தியும். பெற்ற பிள்ளைக்கே பெரும் சத்துருவாயிருக்கும் பிசாசு அல்லவா? அதனால்தானே, அவளுடைய சொந்தச் சகோதரனாகிய மழவரையன் கூட அவளுடன் சண்டை பிடித்துக் கொண்டு, பழுவேட்டரையன் கட்சியில் சேர்ந்திருக்கிறான்?"

"ரவிதாஸரே! அந்த முன் குடுமி வைஷ்ணவனைப் போல் இன்னும் யாராவது உண்டோ?"

"குடந்தையில் ஒரு சோதிடன் இருக்கிறான். அவன் பேரிலும் எனக்குச் சந்தேகம் இருக்கிறது. வருகிறவர் போகிறவர்களுக்கு ஜோசியம் சொல்லுவது போல் சொல்லி வாயைப் பிடுங்கிப் பல விடயங்களை தெரிந்து கொள்கிறான். அவனிடம் நீங்கள் யாரும் போகவே கூடாது போனால் எப்படியும் நிச்சயமாக ஏமாந்து 'போவீர்கள்."

"அவன் யாருடைய ஒற்றன் என்று நினைக்கிறீர்கள்?"

"இன்னும் அதை நான் கண்டு பிடிக்க முடியவில்லை. ஒருவேளை தற்போது இலங்கையில் இருக்கும் போலி இளவரசனுடைய ஒற்றனாக இருக்கலாம். ஆனால் ஜோசியனைப் பற்றி அவ்வளவு கவலை எனக்குக் கிடையாது.


அவனால் பெரிய தீங்கு எதுவும் நேர்ந்து விடாது. வைஷ்ணவன் விடயத்திலேதான் எனக்குப் பயம்! அவனைக் கண்ட இடத்திலே தேள், நட்டுவாக்காளி, பாம்பை அடித்துக் கொல்வது போல் இரக்கமின்றிக் கொன்றுவிட வேண்டும்!"

இதையெல்லாம் மருத மரத்தின் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானுக்கு மெய் நடுங்கியது; உடம்பெல்லாம் வியர்த்தது. அந்த மரத்தடியிலிருந்து உயிரோடு தப்பித்துப் போகப் போகிறோமா என்றே அவனுக்குச் சந்தேகம் உண்டாகி விட்டது. போதும் போதாதற்கு அந்தச் சமயம் பார்த்து அவனுக்குத் தும்மல் வந்தது. எவ்வளவோ அடக்கிக் கொள்ளப் பார்த்தும் முடியவில்லை. துணியை வாயில் வைத்து அடைத்துக் கொண்டு 'நச்'சென்று தும்மினான்.

அந்தச் சமயம் மேலக் காற்று நின்றிருந்தது; காட்டு மரங்களின் மர்மர சத்தமும் நின்று போயிருந்தது. ஆகையால் திருமலையப்பனின் அடக்கிய தும்மல் சத்தம் பக்கத்தில் பேசிக் கொண்டிருந்த சதிகாரர்களுக்குச் சிறிது கேட்டு விட்டது.


"அந்த மருத மரத்துக்குப் பின்னால் ஏதோ சத்தம் கேட்கிறது. சுளுந்தைக் கொண்டு போய் என்னவென்று பார்" என்றான் ரவிதாஸன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்



### சுங்க வரி

(நேற்றைய தொடர்ச்சி)

தாமே வலிய அவனை அழைத்து அருகே அமர்த்தி அவனிடம் முறையிட்டார் குரு.

"ஐயா! நான் பிறந்ததிலிருந்து இதற்கு முன் வரை ஒருபோதும் ஒரு குதிரையிலும் ஏறியவன் இல்லை. ஒருநாளும் சிரிக்காதவன் திருநாளில் சிரித்த கதையாக இன்றைக்குப் போய் நான் இலவசமாகக் கிடைத்த இந்தக் குதிரையின் மேல் ஏறிவர, வரியைக் கட்டு என்று வாதாடிக் கொண்டு வழியிலே வந்துவிட்டான் ஒரு வம்பன்.

இது அநியாயம் இல்லையா? வழியிலே மடக்கி வரி கேட்பது, வழிப்பறிக் கொள்ளையல்லவா? நீதியில்லாமல் இப்படிக் கடுமையாக மறித்து கொடுமையாகப் பிடுங்கிக் கொள்கிற பணம் யாருக்கு என்ன நன்மை செய்தும்? என் வயிறு எரிகிறது.

அந்தப் பணம் அவனுக்கு உதவாமல் தான் போகும். அது அவனுக்கு ஜீரணமாகாது. நெருப்பாக பெரிய ரணம் தான் ஏற்படுத்தும்" என்று தம் வேதனையை எல்லாம் வார்த்தைகளாக வடித்துக் கொட்டினார் பரமார்த்த குரு.

அதைக் கேட்டு, சத்திரத்திலிருந்தவனும் கவலையடைந்தான். குருநாதரின் நொந்த உள்ளத்துக்கு இதமாக, பதமாக நாலு வார்த்தைகள் சொல்லத் தொடங்கினான் அவன்.

"குருசுவாமி! இந்தக் கலி காலத்தில இப்படியெல்லாம் நடப்பது சகஜமாயிருக்கிறது. இந்தக் காலத்தில் பணம் தான் எல்லாம். பணம் தான் குரு.

பணம்தான் தெய்வம்! உங்களுக்குத் தெரியாதா? பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்குமே! பணம் இல்லாதவன் நடைப்பிணம் தானே! பணம் பந்தியிலே குணம் குப்பையிலே என்று கேள்விப்பட்டதில்லையா? பணத்தை விடப் பெரிய சொந்தமும் பந்தமும் உண்டா? என்ன? ஆகவே நடந்து போனதை எண்ணிக் கலங்க வேண்டாம். போனது போனது தானே! வருந்துவதால் திரும்பி வந்துவிடவா போகிறது?" என்றான் அவன்.

"ஆமாம் அப்பா! இந்தக் காலத்திலே அசிங்கத்திலே ஓர் அரைக் காசு கிடைத்தாலும் விட்டுவிட மாட்டார்கள். அதை அக்கறையோடு எடுத்து? நாக்கிலேயே நக்கிச் சுத்தம் செய்து கொள்வார்கள்!" என்றார் குருவும்.

"உண்மைதான். கொஞ்சம் கூட கூசாமல் அவர்கள் அப்படித்தான் செய்வார்கள். அசிங்கம் நாறுகிறதே என்று கூச்சப்படவே மாட்டார்கள்.

ஆசை தான் மீறுகிறதே... எது நாறினால் என்ன? பணம் தானே பிரதானம்! சந்தேகமே வேண்டாம். இதற்குச் சரியான சாட்சியாக ஒரு சம்பவத்தை நான் சொல்கிறேன் கேளுங்கள்." என்று ஆரம்பித்தான் அவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வாழும் மனிதர்களுக்கு எல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்து – இந்த பாரை உயர்த்திட வேண்டும். – பாரதி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ சாதனைகள் கண்டு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எங்ஙனம் எங்கள் தமிழ் இனத்தின் பெரும் சொத்தாக இருக்கிறதோ அதேபோல, யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையும் எங்கள் உயிர் காக்கும் பெரும் சொத்து என்பதை யாரும் மறந்துவிடலாகாது.

அதிலும் எங்கள் மருத்துவ நிபுணர்கள், எங்கள் மருத்துவர்கள், எங்கள் துணை மருத்துவ சேவையாளர்கள் இணைந்து சிகிச்சை வழங்குகின்ற அதியுயர் மருத்துவ சிகிச்சை நிலையமாக யாழ்.போதனா வைத்தியசாலை விளங்குகிறது எனும்போது, எங்களை அறியாமல் எங்கள் தோள்புயங்கள் உயருகின்றன.

உண்மை. ஒரு தமிழ் மகன் தென்பகுதியில் உள்ள உயர் அரச மருத்துவமனையில் சிகிச்சை பெறலாம். ஆனால் மருத்துவர்கள் பார்வையிடும்போது, அவர்கள் உரையாடும்போது, அவர்கள் சிகிச்சையளிக்கும்போது ஏற்படக்கூடிய உளம்சார் திருப்தி என்பது ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே இருக்கும்.

இதற்குக் காரணம் அவர்களின் சிகிச்சையோ அன்றி அணுகுமுறையோ அல்ல.

மாறாக, எங்களுடையது என்ற உரிமை கொண்டாட முடியவில்லை என்ற மனக்குறையே உளம்சார் திருப்திக் குறைவுக்கு காரணமாகிறது.

ஆக, யாழ்.போதனா வைத்தியசாலையில் நாம் சிகிச்சை பெறும்போது எங்கள் பிள்ளைகள், எங்கள் சகோதரர்கள் அவர்களுடன் கதைக்கலாம் நிலைமையை எடுத்துக்கூறலாம் என்ற மனத்தைரியம் இருக்கிறதே; அதற்குள் ஊரும் உறவும் பழக்கமும் பாசமும் பற்றும் அன்பும் அரவணைப்பும் மேலோங்கி நிற்கிறது.

இந்த அடிப்படையில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை எம் தமிழினத்தின் விலை மதிப்பற்ற சொத்து என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதேநேரம் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சை, துண்டாடப்பட்ட கையை மீளப் பொருத்திய சாதனை, பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை எனப் பல சாதனைகள் படைக்கப்பட்டு வருவதைக் கண்டு அகமகிழாமல் இருக்க முடியாது.

அதிலும் இவை எங்கள் மருத்துவர்களின் சாதனை எனும்போது, சாதனை படைத்தவர்களின் முகம் தெரியாமலே அகம் மலருகின்ற அந்த உறவு இருக்கிறதே அதன் உன்னதம் மனித மொழிகளால் விபரித்துவிடக் கூடியதன்று.

நிலைமை இதுவாக இருக்கையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளதென்ற செய்தியை அறியும் போது, எம்மை அறியாமலே இறைவா! எல்லாம் உன் செயல். எங்கள் மருத்துவர்கள் இன்னும் இன்னும் சாதனை படைக்க நீ அருள்புரிய வேண்டும் என இதயம் இறைவனை வேண்டுகிறது.

அதேநேரம் எங்கள் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் மருத்துவ சாதனைகள் தனியார் வைத்தியசாலைகளுக்குத் தானமாக்கப்பட்டுவிடக்கூடாது என்பதும் நம் பிரார்த்தனை.

ஆம், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் ஆற்றப்படும் மருத்துவ சாதனைகள் தனியார் வைத்தியசாலைகளுக்குத் தானம் செய்வதற்கான அங்குரார்ப்பணமாக இருக்குமாயின், அங்குதான் எங்களுக்கு அந்த மருத்துவ சிகிச்சை கிடையாதா என்ற ஏழைகளின் ஏக்கப்பெருமூச்சு காற்றோடு கலந்து அனலாய் வீசும் என்பதால், மருத்துவ சாதனைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் சாதனை படைக்கட்டும்.

# இலங்கையின் பொருளாதாரம் செயற்கை சுவாசத்தில் உள்ளது

## தி நியூயோர்க் டைம்ஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மீண்டும்அமைதியாகியுள்ளது. இருந்தபோதும் அங்கு எல்லாமே சிறப்பாக இருக்கிறது என்ற அர்த்தம் இல்லை என்று தி நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

மேலோட்டமாக நோக்கிப் பார்த்தால், இலங்கை, அரசியல் குழப்பம் மற்றும் திவால் நிலையில் இருந்து அமைதி நிலைக்கு திரும்பியுள்ளது.

எனினும் அடிப்படையில் இலங்கையின் பொருளாதாரம் செயற்கை சுவாசத்தில் உள்ளது. நசுக்கும் கடனில் இருந்து அரசாங்கம் இன்னும் மீளவில்லை.

பல இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு தீவிரமாக முயற்சி செய்கிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, கிட்டத்தட்ட 30 சதவீத மக்கள் உணவுப் பாதுகாப்பின்மையில் உள்ளனர்.

இந்தியா, கடன் மறுசீரமைப்புக்கான உத்தரவாதத்தை அளித்துள்ளது. கடந்த வாரம், சீனாவும், சர்வதேச நாணய நிதியத்துக்கு தமது ஆரம்ப பதிலை அனுப்பியது. இலங்கை அதிகாரிகள் நம்பிக்கையளிப்பதாகக் கூறினர்.

எனினும் இது சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்துமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இலங்கைக்கு வழங்கும் எந்தவொரு சலுகையும், தாம் கடன் வழங்கியுள்ள ஏனைய நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்துவிடும் என்று அது நினைக்கிறது.

மறுபுறத்தில் சீனாவை எதிர்பார்த்து, இலங்கை அரசாங்கம் தனது வரவு செலவுத்திட்ட இடைவெளியைக் குறைக்க, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிவர்த்தி செய்து வருகிறது.

இதில், வரிகளை உயர்த்துதல், எரிபொருள் மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசிய பொருட்களுக்கான மானியங்களைக் குறைத்தல் மற்றும் பணத்தை இழக்கும் பொது நிறுவனங்களின் தனியார் மயப்படுத்தும் திட்டங்கள் அடங்குவதாக தி நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது. (ம-7)

## எதிர்வரும் 28ஆம் திகதிவரை

# வேலன் சுவாமிகளுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வேலன் சுவாமிகளுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேசிய பொங்கல் விழாவில் கலந்து கொள்வதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண வருகையை எதிர்த்து அமைதி வழி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம்பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டு காயங்களை ஏற்படுத்தியமை, சட்டவிரோத கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கடந்த 18ஆம் திகதி வேலன் சுவாமிகள் கைது செய்யப்பட்டு, அன்றைய தினம் இரவு மன்றில் முற்படுத்தப்பட்ட வேளை, வழக்கு விசாரணைகளை நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைத்த மன்று வேலன் சுவாமிகளை பிணையில் விடுவித்தது.

இந்நிலையில் மறுநாள் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவன் எஸ்.சோமபாலன் மற்றும் வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க செயலாளர் ஜெனிற்ரா ஆகியோருக்கு எதிராகவும் மன்றில் வழக்குதாக்கல் செய்யப்பட்டதனை அடுத்து அவர்களையும் நேற்று செவ்வாய்க்கிழமை மன்றில் முன்னிலையாகுமாறு மன்று அழைப்பாணை விடுத்திருந்தது. இந் நிலையில் நேற்றையதினம் செவ்வாய்க்கிழமை, யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ. ஏ. ஆனந்தராசா முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன் போது பிணையில் விடுக்கப்பட்டுள்ள வேலன் சுவாமிகள் மற்றும் அழைப்பாணை விடுக்கப்பட்ட இருவருமாக மூவரும் மன்றில் முன்னிலையானார்கள்.

அதனை அடுத்து அழைப்பாணை விடுக்கப்பட்ட இருவரையும் தலா ஒரு இலட்ச ரூபாய் சரீர பிணையில் செல்ல அனுமதித்த மன்று, அவர்கள் இருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு சென்று வாய் மூல வாக்குமூலத்தை அளிக்குமாறு உத்தரவிட்ட நீதவான் வழக்கினை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத் திவைத்தார். (ம-7)

## சாவகச்சேரியில்

# அரச - தனியார் பஸ் விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பகுதியில் அரச பேருந்தும், தனியார் பஸ்சும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று பிற்பகல் 4.15 மணியளவில் நுணாவில் ஏ9 வீதியில் இடம்பெற்றுள்ளது. யாழிலிருந்து கண்டி நோக்கி பயணித்த அரச பேருந்து முன்னால் சென்ற வாகனத்தை முந்த முற்பட்ட போது எதிர்த்திசையில் வந்த மினி பஸ்சுடன் மோதி உள்ளது.

இந்த விபத்து சம்பவத்தில்வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்ட போதிலும் பயணிகள் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. (ம-7)

# மதுபோதையில் நண்பனின் பிறப்புறுப்புக்கு கத்தியால் வெட்டு

## பதுளையில் சம்பவம்

(பதுளை)

மது அருந்திகொண்டிருந்த இருவர் அளவுக்கதிகமான குடியால் மயங்கிய நிலையில் ஒருவர் அருகில் இருந்த மற்றொரு நண்பரின் பிறப் புறுப்பை கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டியுள்ளார்.

இதையடுத்து அவர் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பதுளை வில்வ தல்தென பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிறப்புறுப்பு வெட்டப்பட்டதில் பலத்த காயங்களுடன் கீழே விழுந்த இந்த நபர், மற்றுமொரு நண்பர்கள் குழுவுடன் சேர்ந்து அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து வைத்தியர்கள் பொலிஸாருக்கு தெரிவித்த நிலையில் இதுகுறித்தவிசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ம-7)

# முட்டை இறக்குமதி செய்வதற்கு இடையூறு விளைவிப்பவர்கள் யார்?

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

முட்டை இறக்குமதிக்கு இடையூறு விளைவிப்பவர்கள் தொடர்பில் விரிவான அறிக்கையை அடுத்த அமைச்சரவை கூட்டத்திற்கு சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

முட்டை இறக்குமதியைத் தடுக்க சில தரப்பினர் முயற்சிப்பதாக வர்த்தக அமைச்சர் அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இதேவேளை, விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் முட்டைகளை இறக்குமதிசெய்தால்கோழிப் பண்ணையாளர்களுடன் இணைந்து பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சிசிர பியசிறி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பல மாநிலங்களில் பறவைக் காய்ச்சல் பரவிவரும் நிலையில் முட்டைகளை இறக்குமதி செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், முட்டை இறக்குமதி செய்யப்பட்டால் உள்ளூர் கோழிப் பண்ணை தொழில் வீழ்ச்சியடையும் என வைத்தியர் பியசிறி தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமற்ற வரி அதிகரிப்பை நிறுத்தாவிடில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நியாயமற்ற வரி அதிகரிப்பை நிறுத்துவதற்கு இந்த வாரத்திற்குள் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்படாவிடின், எதிர்வரும் வாரத்திலிருந்து பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.**

நேற்று ஜனாதிபதியுடனான கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்து கடிதமொன்று அனுப்பியுள்ளதாக தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர். மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, துறைமுகத்தின் அனைத்து தொழிற் சங்கங்களும் இணைந்து இன்று ஒன்றுகூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பொது ஊழியர்கள் சங்கத்தின் பிரதம செயலாளர் நிரோஷன் கொரகானஹே தெரிவித்தார். (நி)

## 11.4 மில்லியன் டொலர் செலவில் அம்பாந்தோட்டையில் மின் சேமிப்பு தொகுதி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திடீர் மின்சாரத் தடைகள் ஏற்படும் போதும் மின்சாரத் தேவைகள் அதிகரிக்கும் போதும் தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக மின் சேமிப்புத் தொகுதியொன்றை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கொரியா மற்றும் இலங்கை அரசுக்கும் இடையில் கையொப்பமிடப்பட்டுள்ள மானியங்கள் உதவித்திட்டங்கள் தொடர்பாக சட்டகத்தின் கீழ் அம்பாந்தோட்டை மின் உப நிலையங்களுக்கு அண்மித்ததாக 5 மெகாவோல்ட் இயலளவைக் கொண்ட 8 மணித்தியாலய மெகாவோல்ட் வலுசக்தியை சேமித்து வைக்கக்கூடிய தொகுதியொன்றை நிறுவுவதற்காக 14.3 கொரிய வொன் பில்லியன்கள் (11.4 மில்லியன் டொலர்கள்) வழங்குவதற்கு கொரிய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது. (நி)

## வரிச் சட்டமூலத்தை திருத்த அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டமூலத்தை திருத்துவதற்கு அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டத்தின் கீழ், வருடாந்தம் 120 மில்லியனுக்கும் அதிகமான வருமானம் ஈட்டும் நபர்கள் மீது 2.5 வீத சமூக பாதுகாப்பு வரி விதிக்கப்படுகின்றது.

சில ஏற்றுமதியாளர்கள் மற்றும் மிகச் சிறிய இலாபத்தில் அந்நிய செலாவணியில் ஈடுபடுபவர்கள், 2.5 வீத வரித்தொகையை செலுத்தினால், அவர்களால் தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்ல முடியாது என அமைச்சரவை பேச்சாளர், பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார். (நி)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### சந்தை, இறைச்சிக் கடைக்கான 08.02.2023-31.12.2023 வரையுள்ள காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி, ஏலக் கேள்வி அறிவித்தல் - 2023

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-01.02.2023 இல் இருந்து 07.02.2023 ஆம் திகதி 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-08.02.2023 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-08.02.2023 காலை 10.30 மணிக்கு
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 22.10.2022 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.
04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையைக் கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப் பிரதியையும் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
06. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

**2023 ஆம் ஆண்டு சந்தைக் குத்தகை விபரம்**

| தொ.இல | குத்தகை விபரம் | 2023 ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் (1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 45,800.00 | 458.00 | 500.00 | 100.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 1 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 120,000.00 | 1200.00 | 500.00 | 100.00 |

(சி-5872)

**தவிசாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

**01.02.2023**


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 160 | 180 | 180 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 260 | 340 | 300 | 300 |
| தக்காளி | 200 | 160 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 50 | 80 | 100 | 100 |
| கரட் | 120 | 160 | 200 | 200 |
| பூசணி | 80 | 90 | 100 | 100 |
| புடோல் | 200 | 180 | 180 | 120 |
| வாழைக்காய் | 200 | 200 | 160 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 600 | 550 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 180 |
| பாகற்காய் | 250 | 300 | 260 | 350 |
| வெண்டிக்காய் | 280 | 350 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 90 | 100 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 300 |
| பீற்றூட் | 160 | 160 | 200 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 1600 | 1400 | 1200 | 1600 |
| போஞ்சி | 300 | 250 | 240 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 200 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 60 | 80 |
| தேசிக்காய் | 50 | 50 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 | 250 |
| வெங்காயப்பூ | 160 | 150 | 240 | 300 |
| முள்ளங்கி | 40 | 80 | 160 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 | 80 |
| வல்லாரை | 50 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | 120 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி...

சடலம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கரையொதுங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கடலில் குளிப்பதற்காக நண்பர்களுடன் சென்ற நாகர்கோவில் வடக்கைச் சேர்ந்த நந்தகுமார் திருமுருகன் (வயது-15) என்ற சிறுவன் சுழியில் சிக்கி கடலில் மூழ்கி காணாமல் போயிருந்தார்.

அவரைத் தேடும் பணி இரண்டு நாட்களாக நடைபெற்ற நிலையில் நேற்று அதிகாலை சடலம் செம்பியன் பற்று கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது. (ம-7,33,60,104)

## 20 பவுண் நகை...

செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பருத்தித்துறை திக்கம் பகுதியில் வீட்டில் தனித்திருக்கும் இளம் தம்பதிகள், வீடு கட்டும் வேலை இடம்பெற்று வரும் நிலையில், கூலியாட்களுக்கான சம்பளம் கொடுப்பதற்காகவும், கட்டுமானப் பொருட் கொள்வனவுக்காகவும், சில தினங்களின் முன் வங்கியில் இருந்து பணத்தை எடுத்து வீட்டில் வைத்துள்ளனர். குறித்த பணத்தையும் நகைகளுடன் சேர்த்து வைத்துள்ளனர்.

இந்நிலையில் வீட்டின் கதவை யுடைத்து உட்புகுந்த முகமூடியணிந்த கொள்ளையர்கள் கத்தி முனையில் வீட்டாரை தாக்கிவிட்டு ஐந்து இலட்சம் ரூபாய் பணம் மற்றும் 20 பவுண் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். (ம-7,60)

## மன்னிப்பு...

மக்களிடமும் தாம் மன்னிப்பு கோருவதாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தவிசாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈஸ்டர் தாக்குதல் விடயத்தில் தாம் தவறிழைத்ததாக அர்த்தப்படாது எனவும் ஜனாதிபதி என்ற வகையில் தம்மால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தவறிழைக்கும் பட்சத்தில் அதற்கு ஒரு ஜனாதிபதியாக பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு தமக்கு உள்ளதெனவும் மைத்திரிபால சிறிசேன இதன்போது சுட்டிக்காட்டினார். (ம-7)

## சாதாரண மக்கள்...

ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் கட்சி அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டைக் கட்டியெழுப்ப புதிய இலக்கும், தொலைநோக்கு பார்வையும் தேவைப்பட்டாலும், நடைபாதையில் வியாபாரம் செய்யும் வியாபாரி முதல் எல்லோர் மீதும் தற்போதைய அரசாங்கம் வரிக்கு மேல் வரி விதிப்பதாகவும், சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவுகளை நடைமுறைப் படுத்துவதாகவே இதற்கு அவர்கள் காரணமாக கூறுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சர்வதேச நாணயநிதியத்தை கையாள்வது என்பது சாதாரண மக்களுக்கு குறைந்த அழுத்தத்தை கொடுப்பதானதாக இருந்தாலும், தற்போதைய அரசாங்கம் மக்கள் மீது வரிகளை சுமத்தி, ராஜபக்சர்கள் திருடிய பணத்துக்கான வட்டியை மக்களிடமிருந்தே அறவிட்டுக்கொண்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

விவசாயிகளை அழிக்கும் வேலைத் திட்டத்தின் தற்போதைய நிலையாக விவசாயிகளின் விளைச்சலை விற்கக்கூடிய நல்ல சந்தை வாய்ப்பொன்று இல்லாததுதான் எனவும், விவசாயியைப் பாதுகாக்க, விவசாயியை அரவணைக்கும் சாதாரண மக்களின் துன்பங்களை புரிந்து கொள்ளும் பிரேமதாஸ சகாப்தத்தை உருவாக்குவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## இலங்கையிலு...

யாளர்களுக்கும் இடையில் நேற்று அரச நிர்வாக அமைச்சில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்திய முயற்சியாண்மையாளர்கள் இலங்கையில் காணப்படும் மத வழிபாட்டுத் ஸ்தலங்களை மேம்படுத்த உறுதிமொழி வழங்கியுள்ளனர்.

இலங்கையின் மதவழிபாட்டுச் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காகவே இந்திய முயற்சியாண்மையாளர்கள் உதவுவதாக தெரிவித்துள்ளனர்.

இராவணாஎலிய, நுவரெலியா, சீதாஎலிய உள்ளிட்ட இராமாயணத்தில் கூறப்பட்ட இடங்களை சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கும் பக்தர்களை அழைத்து வருவதற்கும் தேவையான முதலீடுகளை செய்ய இந்திய முயற்சியாண்மையாளர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளனர். (ம-7)

## கல்வியங்காட்டில்...

கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் லக்சாந் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

முன்பகை காரணமாக இந்த அடாவடி மற்றும் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)

## ஊழல் தரப்படுத்...

புள்ளியால் வீழ்ச்சியடைந்துள்ளதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊழல் புலனாய்வு சுட்டெண்ணுக்கமைய, 180 நாடுகளில் 36 புள்ளிகளுடன்இலங்கை 101ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

புள்ளிவிபரவியல் துறையைச் சேர்ந்த நிபுணர்கள் மற்றும் கருத்துக்கணிப்புகளின் அடிப்படையில் இந்தத் தரப்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது. (ம-7)

## உட...

தமிழ் மக்களுக்கான தீர்வு உடனடியாகவழங்கப்பட வேண்டும், ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகள் காலத்தை இழுத்தடிப்பு செய்பவையாக உள்ளன.

"எனது மிக நீண்டகால அரசியல் பயணத்தில் நான் எப்போதும் நேர்மையானவனாகவே நடந்து வருகின்றேன்.

ஊழல் அற்ற ஆட்சியைக் கொண்டு வர எத்தனித்தோம். இதற்காகவே ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற போட்டியில் பங்கேற்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னை ஆதரிப்பதாக இருந்தது. ஆனால், இறுதியில் என்ன நடந்தது என்று தெரியவில்லை. சம்பந்தன் கடைசி நேரத்தில் மாறி விட்டார்.

நாம் விரும்புகின்ற நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக இளையோர்கள் அடங்கலாக இந்த நாட்டு மக்களின் முன்னிலையில் வந்திருக்கின்றோம். தேர்தலில் போட்டியிடுகின்றோம். எமது வேட்பாளர்களை ஆதரியுங்கள்" என தெரிவித்துள்ளார்.(ம-7)

## சர்வதேச நாணய...

நிதி இராஜாங்க அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமெரிக்கத் தூதுவர், அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் ஏனைய நாடுகளின் நம்பகத்தன்மை மேலும் உறுதிப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் நிதி ஸ்திரத்தன்மையை அடைவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் கடினமான சீர்திருத்தங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த அமெரிக்க தூதுவர், ஒரு நாடாக ஒன்றிணைந்து செயற்படுவது பாராட்டப்பட வேண்டியது என குறிப்பிட்டுள்ளார் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 31/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1472
வெற்றி இலக்கங்கள்
தனுசு 1 3 1 9 6 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.31
சீட்டிழுப்பு இலக்கம் - 1047
R 03 38 48 55
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.31
சீட்டிழுப்பு இலக்கம் 3259
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Z 39 49 78 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 31/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1365
D 11 06 14 54 59

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.31
சீட்டிழுப்பு இலக்கம் 326
மகரம் 05 17 53 54 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/31
சீட்டிழுப்பு இலக்கம் 5017
E 1 1 9 3 2 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1992 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.01.31 தினம் செவ்வாய்க்கிழமை
F 19 47 56 70
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,482,700/-
DLB

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.31
சீட்டிழுப்பு இல : 4153
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 37,874,260.90
வெற்றி இலக்கங்கள் 04 25 43 55 V
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 282
சீட்டிழுப்பு திகதி 2023.01.31
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 21 45 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,855,760/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,975,080/-
திகதி 2023-01-31
வெற்றி வாரம் 3704
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 19 48 50 57 விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,511,520/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 30 30 42 43 75
சீட்டிழுப்பு வாரம் 1168
திகதி 2023.01.31 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 302,347,716.20
DLB Web : www.dlb.lk

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1818
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.01.31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,473,380/-
வெற்றி இலக்கங்கள் 10 18 34 58 Z
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14446)

076 825 7716 (ஆகாஸ்)



**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-5879)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



**பதவி வெற்றிடம்**

- வெப் இயந்திர இயக்குநர்கள்
  பயிலுநர்கள் (இரவுக்கடமை-ஆண்கள்)

யாழ்.நகரிலிருந்து 5 km தொலைவில்
இருப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு

076 097 3121



**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி, நுணாவில் (A9) கண்டி பிரதான வீதி முகப்பாக நிலப்பரப்பு 4

வணிக வளாகங்கள், ஹொட்டல்கள், அமைப்பதற்கும் சகல வியாபார தேவைகளுக்கும் ஏற்ற இடம்.

நல்ல தண்ணீர், நல்ல சூழல்.

- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- தரகர் தேவையில்லை.

(14464)

தொடர்புகளுக்கு :- 076 690 6272



**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்கள், பிள்ளைகளின் யாதகக் குறிப்புகள், அவர்களின் பலன்களும் துல்லியமாக கணித்து பெற்றுக் கொள்ளலாம். திருமணத்திற்கு வெளிநாடு செல்ல விரும்பும் மணமக்கள் உடனடியாக தேவை. எல்லா வயதினரும் தொடர்பு கொள்ளவும்.

**காயத்திரி திருமண சேவை**

தொடர்புகளுக்கு (உரும்பிராய்)
076 835 1932 / 021 223 2222
வெளிநாட்டு திருமணத் தொடர்புகளுக்கு
Wahlen STR - 143 - 4242 Laufen, Swiss
Tel: 0041768185443 Whatsapp இல் மட்டும்

(14466)


# கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றிரவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவரது மகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

ஐயாவை வழமையாக வீட்டிற்கு வந்து பரிசோதனை செய்யும் வைத்தியர்கள் அவரது உடல்நிலை பலவீனப்பட்டுள்ளமையால் அவரை கட்டாயம் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

இதனால் ஐயா தற்போது கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவித்தார். (ம-7)


**நாகபூஷணி திருமண சேவை**

பல்லாயிரக்கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர் மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596, 071 999 9306

(C-5874)


**கண்ணீர் அஞ்சலி**



**அமரர் நாகலிங்கம் கனகரத்தினம்**

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உரும்பிராய்ச்சந்திக் கிளையின் செயலாளரும் பொதுச்சபை உறுப்பினரும், உபசபை உறுப்பினருமாகிய நாகலிங்கம் கனகரத்தினம் அவர்கள் திடீரென மறைந்தது எங்களனை வருக்கும் கூட்டுறவுத் துறைக்கும் பேரிழப்பாக அமைந்துள்ளது. அன்னாருக்கு எமது சங்கத்தின் சார்பில் துயரம் நிறைந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மலர்வு : 11.02.1941
மறைவு : 29.01.2023

பணிப்பாளர் சபையும் பணியாளர்களும்
நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(14457)


அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

**றோயல் நெய்**



உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான **றோயல் நெய்** கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.

ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.

Packed By:-
Royal Industries®
Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 567

குறிப்பு

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(C-5875)



**சயன்ஸ் அக்கடமி**

நல்லூர், முருகன் ஆலயம் முன்பாக | நாவலர் வீதி, அரியாலை.

தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற்தர நிறுவனம்

**புதிய கல்வியாண்டு - 2023**

| தரம் 1 முதல் தரம் 5 வரை | தரம் 6 முதல் O/L வரை |
|---|---|
| வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப் பிரிவு | தமிழ்மொழி மூல வகுப்புகள் & English Medium Classes |

இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும் !

இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள் !

ஆரம்பம் - 03.02.2023 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(C-5876)

"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"

தொ.பே : 077 538 8471, 077 312 6807, 021 222 9016



**அகரம்**

உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

**புதிய கல்வி ஆண்டு-2023**

புலமைப்பிரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

புதிய தரம் 06 தமிழ் மொழி மூல,
English Medium வகுப்புக்கள் ஆரம்பம்

05.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)

தைப்பூச நன்னாள் அன்று காலை 7.40 - 8.40

அனுமதிகளை 18.01.2023
இருந்து பெற்றுக் கொள்ளலாம்

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

(14411)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org